24 MAR 1998

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 8 (22-03-1998) ஞாயிற்றுக்கிழமை UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 98

# கதிர்காமர் டில்லி விரைந்து வாஜ்பாயைச் சந்தித்தார்!

## யாழ். மேயர் விழுந்து காயம்!

கொழும்பு, மார்ச் 22

யாழ். மாநகர மேயர் சரோஜினி யோகேஸ்வரன் வீழ்ந்து காயமடைந்த நிலையில் நேற்றுக் கொள்ளுப்பிட்டியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

வீட்டு மாடிப்படியில் அவர் சறுக்கி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கையிலும், தோள் மூட்டிலும் சிறிது தாக்கம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21-9)

## பதவி ஏற்றகையோடு பறந்து சென்றார்

புதுடில்லி, மார்ச் 22

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று புதுடில்லி விரைந்து சென்று புதிதாக ஆட்சிபீடம் ஏறியுள்ள பாரதீய ஜனதாத் தலைவர்களைச் சந்தித்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் முதலில் இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். பின்னர் பிரதமர் வாஜ்பாயை அவர் சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வாழ்த்துச் செய்தியை பிரதமர் வாஜ்பாயிடம் கையளிப்பதற்காகக் கதிர்காமர்

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப கதிர்காமருக்குத் தான் இனி வேலை அதிகமாக இருக்கப் போகுது எண்டு சொல்லுங்கோ ..!

## சினைப்பர் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 22

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர் ஓலுமடுவுக்கு மேற்கே நேற்று நடத்திய சினைப்பர் தாக்குதலில் 2 விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7)

## மின் மாற்றி தகர்ப்பு

கொழும்பு, மார்ச் 22

மட்டக்களப்பு சம்மாந்துறை ''சீயா'' சந்தியில் அமைந்திருந்த மின் மாற்றி ஒன்று நேற்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

# இலங்கைப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு தேவை!

புதுடில்லி, மார்ச் 22

''இலங்கைப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வுகாண சாத்தியப்பட்ட அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.''

மேற்கண்டவாறு இந்தியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

பத்திரிகையாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வர அனைத்து ஒழுக்க ரீதியான அழுத்தங்களையும் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-9)

## இலங்கையர் உட்பட 339 வெளிநாட்டவர் சிங்கப்பூரில் கைது!

சிங்கப்பூர், மார்ச் 22

சிங்கப்பூரில் உரிய ஆவணங்கள் இன்றித் தங்கி இருந்த இலங்கையர் உட்பட 339 வெளிநாட்டவர்கள் சிங்கப்பூர் பொலீஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை அவரவர் நர்டுகளுக்கு திருப்பி அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

இவ்வாரத்தில் மட்டும் 800 பேர் இவ்வாறு சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டு அவரவர் நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். (ஐ-7-3)

## கனரக வாகனங்கள் வர 3 பாதைகள் அறிவிப்பு
### கொழும்பில் புதிய நடைமுறை

கொழும்பு, மார்ச் 22

கொழும்பு நகருக்குள்வரும் கனரக வாகனங்கள் குறிப்பிட்ட வீதிகள் ஊடாகவே வர வேண்டும் என்று பொலீஸாரால் வாகன சாரதிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

காலி — கொழும்பு நெடுஞ்சாலை ஊடாக வரும் வாகனங்கள் களுபோவில வைத்தியசாலை வீதி, பாமன்கடைப் பாலம், எல்பிற்றிக்கல மாவத்தை, பொதுமயானச் சுற்று வட்டம், டி. எஸ். சேனநாயக்க மாவத்தை, பேஸ்லையின் வீதி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, தொழில்நுட்பக் கல்லூரிச் சந்தி என்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளியன்று நம்பிக்கை வாக்கெடுப்பு

புதுடில்லி, மார்ச் 22

இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவி ஏற்றுள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மக்களவையில் நம்பிக்கை வாக்கைக் கோருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன் நாளை மறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் பாதிப்பு: உதயன் செய்திக்கு மேலதிக விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வீதியில் சைக்கிளில் சென்ற — வாய் பேச முடியாத அப்பாவி இளம்பெண் ஒருவர் படையினர் சிலரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ''மீசாலை தெற்கில் நேற்று இளம் ஊமைப் பெண் மீது பாலியல் பலாத்காரம்?'' என்ற தலைப்பில்

( 10 ஆம் பக்கம் பார்க்க )

## மீளக்குடியமர்வது தொடர்பாக
# வடபகுதி முஸ்லிம்கள் புலிகளுடன் பேச முயற்சி

கொழும்பு, மார்ச் 22

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்வது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த முயற்சிப்பது என நேற்று புத்தளத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் அகதிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்பும் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் இன்னும் குடாநாடு திரும்பாது வெளிமாவட்டங்களில் வசித்து வருவது தெரிந்ததே.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாரதிபுரம் பொலீஸ் நிலையம் மூடப்பட்டு பொலீஸார் வாபஸ்!

மட்டக்களப்பு, மார்ச் 22

தம்பலகமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாரதிபுரம் பொலீஸ் நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்டு அங்கு கடமையாற்றிய பொலீஸார் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் முதலாம் திகதி இங்கு எட்டு அப்பாவித் தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே

இந்தச் சம்பவத்துக்கு பொலீஸாரைக் குற்றஞ்சாட்டி பொலீஸ் நிலையத்தை இடம் மாற்றக் கோரி மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தி இருந்தனர்.

அத்துடன் திட்ட அமுலாக்கல் நாடாளு மன்ற விவகார அமைச்சர் பெர்னாண்டோப்புள்ளே சமீபத்தில் பாரதிபுரம் சென்றபோதும் அங்குள்ள மக்கள் இதே கோரிக்கையையே முன்வைத்திருந்தனர்.

இதனை அடுத்தே பொலீஸ் நிலையம் மூடப்பட்டு பொலீஸார் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். (இ)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் சண்முகநாதன்

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் வர்த்தகர் சதாசிவம் சண்முகநாதன் அவர்கள் 4-3-98 இல் ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. திருமதி சதாசிவம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற செல்லத்துரை, திருமதி செ. இலட்சுமி ஆகியோரின் மருமகனும், பவளராணியின் அன்புக் கணவரும், ருபேஸ்குமார் (கொழும்பு), சதீஸ்குமார் (கொழும்பு), மோகனகுமார் (ஹொலன்ட்), சுபலதா (மாணவி — மாத்தளை), லலித்குமார் (மாணவன் — மாத்தளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முன்னாள் வர்த்தகர்களான காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை, வீரசிங்கம், திருமதி மதியாபரணம், பாலசுந்தரம் (கனடா), விநாயகமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், ரவீந்திரன் (வர்த்தகர், Manning Place Milk Bar, Col. 6), ரூபசாந்தன் (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்), செந்தூராணி (ஆசிரியை, மாத்தளை), கலாராணி (மாத்தளை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23-3-98 அன்று ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. பவளராணி (மனைவி)

No. 24/5, 59 th Lane, Manning Place,
Colombo -06. (54225)

## கணேசலிங்கம் பரதன்

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த கணேசலிங்கம் பரதன் 20 – 03 – 98 இல் காலமாகிவிட்டார்.

இவர் கந்தையா கணேசலிங்கம் (பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், பளை) இந்திராதேவியின் அன்பு மகனும், பா. யாழினி (கனடா), க. நளாயினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அருமைச் சகோதரனும், சு. பாஸ்கரனின் (கனடா) மைத்துனரும், பா. பானுஷனின் (கனடா) மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (21–3–98) நேற்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கணேசலிங்கம் (அப்பா)

இடைக்குறிச்சி,
வரணி. (சி/3170)

## இராமலிங்கக் குருக்கள் சாரதாம்பாள்

பருத்தித்துறை கோட்டு வாசல் அம்மன் கோயில் முன்னாள் பிரதமகுரு இராமலிங்கக் குருக்களின் தர்மபத்தினி சாரதாம்பாள் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் சிவபாக்கியம், செந்தில்நாத சர்மா (வாணி புத்தகசாலை, திருகோணமலை), அம்பிகா, பஞ்சாட்சரசர்மா (மட்டக்களப்பு), ஈஸ்வரி, மகேஸ்வரக்குருக்கள் (ஜேர்மனி), ரேவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், வித்தியானந்தக்குருக்கள் (ஜேர்மனி), கௌரி, பாலசுந்தரக்குருக்கள் (நயினை நாகபூஷணி அம்மன் கோயில்,) ஆனந்தி, பாலாம்பிகை, சண்முகேஸ்வரக்குருக்கள் (கொட்டாஞ்சேனை), அனுராதா, சுந்தராஜேஸ்வரசர்மா (வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 – 03 - 98 இன்று பகல் 11.00 மணியளவில் மட்டக்களப்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சுந்தராஜேஸ்வரசர்மா
(மருமகன்)

தொலைபேசி இல. 065 - 22103, மட்டக்களப்பு
வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில்,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (54234)

## பிரம்மஸ்ரீ சுந்தரஐயர் பாலசுப்பிரமணிய சர்மா

இந்தியா கேரள மாநிலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், மீசாலை விக்னேஸ்வர வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியருமான பிரம்மஸ்ரீ சுந்தரஐயர் பாலசுப்பிரமணிய சர்மா அவர்கள் 21-03-98 காலை சிவலோகப்ராப்தியானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரஐயர் அம்மாளுஅம்மாவின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற பார்வதிஅம்மாவின் அன்புக் கணவரும், பிரம்மஸ்ரீ பா. முரளீதரக்குருக்கள் (மூத்தவிநாயகர் தேவஸ்தானம், நல்லூர்) அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(21-03-98) மூத்தவிநாயகர்வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா. முரளீதரக்குருக்கள்
(மகன்)

மூத்தவிநாயகர்வீதி,
நல்லூர். (54228)

## பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். செம்மணி வீதி, முத்திரைச்சந்தியில் உள்ள யோகர் சுவாமி குருகுல இல்லத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 30 வரை நாட்டில் அமைதி வேண்டி பிரார்த்தனையும், ஆத்மீக சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (இ–7)


**சிவா** திரையில்
சிவன்கோயிலடி
யாழ்ப்பாணம்
இன்று முதல்
தினசரி 10. 30 2. 30
அப்பாஸ், சங்கவி
நடித்த
இனி எல்லாம் சுகமே
(புதிய வெளியீடு)
(54242)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
இன்று
மோகன் - பூர்ணிமா,
ஜெய்சங்கர், பாலாஜி,
சுஜாதா, மனோரமா
நடித்த
'விதி'
நேரம்:- 10-30. 2-30
(54075)

**அம்பிகா**
வெண்திரையில்
கண்டி றோட், சாவகச்சேரி.
20 அடி அகலத் திரையில்
இன்று (22-03-98)
காலை 9 மணிக்கு
பயங்கர திகில் நிறைந்த
ஆங்கிலப் படம்
TERMINITOR
( SCHWARZENEGGER )
முற்பகல் 11-30 மணிக்கு
இளைய தளபதி
விஜயின்
காதலுக்கு மரியாதை
மாலை 3-30 மணிக்கு
சுப்பஸ்ரார் ரஜனியின்
முத்து
குறிப்பு: தினசரி புதன் கிழமைகளில் மகளிருக்கு மட்டும் காண்பிக்கப்படும் 25-03-98 காதலுக்கு மரியாதை ( மகளிருக்கு மட்டும் ) (54229)

யாழ்.
**றீகல்** வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
சுப்பஸ்ரார் ரஜனி
நடித்த
முத்து
நாளை முதல்
மேட்டுக்குடி
தினசரி:- 10-30. 2-30
(பழைய நேரம்)
(54217)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
20 – 03 – 98 முதல்
பிரபுதேவா, மீனா
நடித்த
நாமிருவர்
நமக்கிருவர்
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)


## பாலர் பாடசாலை

ஊர்காவற்றுறை நாரந்தனை மத்தி, வடக்குப் பகுதி பாலர்களுக்கான பாடசாலை நாரந்தனை பண்ணை வீதியில் அமைந்துள்ள தனியார் வீட்டில் நாளை திங்கட்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தினால் திறந்து வைக்கப்படும். இதற்கான ஒழுங்குகளை சமூக சேவை அதிகாரி திருமதி ஆர். கந்தப்பா மேற்கொண்டுள்ளார். (ஐ–ரி)


புவியியல்
Mr. BAVAN
98 மானிடப்
புவியியல்
99 படவேலை
2000
நடைபெறுகின்றது.
★ SPOKEN ENGLISH
★ புலமைப்பரிசில் Yr.5
SHAMROCK
(54236)


## தவறிவிட்டது

எனது பவுண் மைச் செயின் கந்தர்மடத்துக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.

ஸ்ரீ மில்
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
(54241)

# மரண அறிவித்தல்

## பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் வெங்கடாசல சர்மா

கொக்குவில் மேற்கு பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் வெங்கடாசல சர்மா பிரபல வயலின் ஆசிரியர் 20-03-1998 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவ ஐயர், சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்களின் ஜ்யேஷ்ட புத்திரனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுபகரி, ஸ்ரீகௌரி, கஜராஜன், திவ்யகரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ருக்மணி, ஜெகதாம்பாள், லலிதாம்பாள், ராஜாம்பாள், பாலச்சந்திரன் (ஆசிரியர், மிருதங்க வித்துவான், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 – 03 - 1998 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஐயனார் கோயில் வீதி, கொக்குவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. பாலச்சந்திரன்
(சகோதரன்)

(50002)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(22 — 03 — 1998)



| பிறப்பு: | மறைவு: |
|---|---|
| 01 — 10 — 1931 | 20 — 02 — 1998 |

அமரர் **கனகசபை தம்பிஐயா**

(உரிமையாளர், நியூ ஸ்டார் ஜுவலர்ஸ், கன்னாதிட்டி.)

அன்புடன் எம்மை வளர்த்து அனைவரையும் இனிய பேச்சினால் கவர்ந்து பலருக்கும் பல வழிகளில் உதவி புரிந்து தனது கடமைகள் யாவற்றையும் இனிது நிறைவுறச் செய்து இருந்த வேளையில் அழைத்து விட்டானே இறைவன்!

எங்கள் அன்பு ஐயாவின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் (26 - 02 - 98) வியாழக்கிழமை நடைபெற்ற வேளையில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளின்போது சகல விதத்திலும் உதவி புரிந்த செட்டியார் தெரு இல. 167, அனுஷா நகை மாளிகை உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் எமது இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது இனிய நன்றிகள்.

இன்று (22 - 03 – 98) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

12/4, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (54240)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வா அன்று சொன்னவை:

# தமிழ்ப் பிரதேசங்களின் ஆட்சியை தமிழர்களிடமே தர வேண்டும்

பகுதி 1

இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்த அளவில் தந்தை செல்வா அவர்கள் இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கலங்கரை விளக்கம்.

தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இலங்கைத் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காக முழுமையாக அர்ப்பணித்தமை காரணமாகவே ஆரம்பத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கியு. சி. என்றழைக்கப்பட்டவர், பிற்காலத்தில் தந்தை செல்வா என இலட்சோப இலட்சம் மக்களால் இலங்கையில் மாத்திரமன்றித் தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா உட்பட்ட வெளிநாடுகளைச் சார்ந்த மக்களாலும் போற்றப்பட்டார்.

தந்தை செல்வா அவர்களை 1947 ஆம் ஆண்டு முதல் அறிவேன். ஆனால் அவரை யான் ஓர் இமயமாகக் கருதத் தொடங்கியது 1956 ஆம் ஆண்டிலிருந்து தான். இன்று போலிருக்கிறது. அன்றைய தினம்.

1956ஆம்ஆண்டுஜூன்மாதம் ஐந்தாம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் சட்ட மூலம் கொண்டுவரப்பட்ட நாள். அந்தப் பாரபட்சமான சட்ட மூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் முகமாக கொழும்பு பழைய நாடாளுமன்ற கட்டடத்திற்குத் தென் மேற்குத் திசையில் காலி முகத்திடலில் வடக்கை நோக்கியவாறு தந்தை செல்வா அவர்களது திட்டப்படி தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் சத்தியாக்கிரகம் இருந்தனர்.

### ஈழத்துக் காந்தி

இதற்கு முதல் தினமே சத்தியாக்கிரகிகள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து தத்தமது பிரதேசத் தலைவர்கள் தலைமையில் கொழும்பை வந்தடைந்திருந்தார்கள். கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம் அவர்களது தலைமையில் பல நூறு தொண்டர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து ரயில் மூலம் கொழும்பை வந்தடைந்திருந்தனர்.

சிங்களம் மட்டும் சட்ட மூலத்தை எதிர்த்து நாடாளுமன்றப் படிக்கட்டுக்களில் சத்தியாக்கிரகம் இருப்பதென முதலில் முடிவு எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த முடிவு பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாகக்

## நாம் வாழும் பகுதியின் உறுதி எமது கையில் இருப்பது அவசியம்

கைகூடாத காரணத்தினாலேயே காலி முகத்திடலில் தமிழ்த் தலைவர்கள் சத்தியாக்கிரகம் இருக்க வேண்டியதாயிற்று.

அகிம்சை வழி நின்ற சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டனர். பலர் நையப் புடைக்கப்பட்டனர். பலர் தலையிலும் காயங்களுக்குள்ளாயினர். ஒரு பத்திரிகையாளனாக அக்காலத்தில் கடமையாற்றிய யானும் அன்றைய தின அல்லோலகல்லோலங்களைக் காலிமுகத்திடலிலிருந்து நேரடியாகவே அவதானிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

சரித்திரத்தில் முக்கிய இடம் பிடித்துள்ள இச்சத்தியாக்கிரக நிகழ்வுகளும் தந்தை செல்வா அவர்களைப் பிற்காலத்தில் மக்கள் ஈழத்துக் காந்தி என அழைக்கக் காரணமாயமைந்தது.

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலையடுத்துப் பிரதமர் பதவிக்கு வந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும், தந்தை செல்வநாயகத்துக்கும் இடையில் இலங்கைத் தமிழ் பேசும் மக்களது உரிமைகள் சம்பந்தமாகக் கைசாத்திடப்பெற்ற ஒப்பந்தமே பண்டா—செல்வா ஒப்பந்தம். அது சரித்திரப்பிரசித்தியும் முக்கியத்துவமும் வாய்ந்ததாயிற்று. பண்டா—செல்வா ஒப்பந்தம் பற்றிப் பலரும் அறிவர். ஆனால் இந்த ஒப்பந்தம் எப்படி எத்தகைய சூழ்நிலையில் உருவானது என்பதை இன்றைய தலைமுறையினர் அறிய மாட்டார்கள்.

### ஓகஸ்ட் போராட்டம்

காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்துடன் தந்தை செல்வா அவர்களது தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைப் போராட்டம் நின்றுவிட வில்லை. 1957 ஆம் ஆண்டில் மாபெரும் சட்ட மறுப்புப் போராட்டம் ஒன்றுக்குத் தந்தை செல்வாவும் அவரது கட்சியினரும் தமிழ் பேசும் மக்களைத் திரட்ட முற்பட்டனர். இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் சட்ட மறுப்பில் ஈடுபட பல்லாயிரம் தொண்டர்கள் திரளலாயினர். இப்போராட்டத்திற்கு 'ஓகஸ்ட் போராட்டம்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

ஓகஸ்ட் போராட்டத்தின் பொருட்டு இருபத்தையாயிரம் தொண்டர்களைத் திரட்டிஅவர்களுக்குப் பயிற்சி அளிப்பது தமது நோக்கம் என்று ஏப்ரல் மாத நடுப் பகுதியில் நான் சார்ந்த 'தினகரன்' நாள் இதழுக்காக அவர் எனக்களித்த பிரத்தியேகச்செவ்வி ஒன்றில் தெரிவித்தார் ஓகஸ்ட் போராட்டம் பற்றி அவர் தெரிவித்த முக்கிய விளக்கத்திலிருந்து ஆங்காங்கே சிறுபகுதிகளைத் கீழே தொகுத்துத் தருகிறேன்.

தற்சமயம் இலங்கையில் இருக்கின்றன. அதற்கு உறுதி இன்று சிங்கள மக்களின் கையில் இருக்கின்றது. எங்கள் பிரதேசங்களுக்கு எங்கள் கையில் உறுதியைப் பெற்றுக் கொள்ளும் நமது நோக்கம் எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு நியாயமானது.

''விஷயத்தைச் சற்று ஆலோசித்தால் இது உண்மை என்று விளங்கும் வேண்டுகோள் மூலம் நாம் நமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. விசேஷமாகத் தமிழ் பேசும் இனத்திற்கு இந்த அரசாங்கம் நீதி நியாயம் என்ற தோரணையில் ஒரு கருமமும் செய்யப் போவதில்லை.

''நேரடி நடவடிக்கையை நாம் பலமாக நடத்தினால் தான் அவர்கள் எங்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வார்கள். அந்த வழிதான் நமக்குள்ள ஒரே வழி. இம்சை வழிகளை நாம் கைக் கொண்டால் எங்களை அழிப்பதற்கும் பண்டாரநாயக்காவுக்குப் போதிய சாட்டு ஏற்பட்டுவிடும்.

''அகிம்சை முறையில் எங்கள் போராட்டத்தை நடத்துவோம். அதில் எங்களுக்கு நஷ்டம் விளையக் கூடும். அதை நாம் நியாயமாகக் கருதுவோம். தமிழ

**செல்லப்பா நடராசா**

### எங்கள் உறுதி யார் கையில்?

''தனிப்பட்ட ஒரு மனிதன் களைத்த நேரத்தில் இளைப்பாறுவதற்கு ஒரு வீடு இருப்பதைப் போல ஓர் இனத்திற்கும் அது தங்குவதற்கு ஒரு பிரதேசம் தேவை. இலங்கையில் தமிழ்ப் பிரதேசத்தின் ஆட்சியைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரதான நோக்கம். தமிழ்பேசும் இனம் பெரும்பான்மையாகக் குடி வாழும் பிரதேசங்கள்

னுக்குத் தனது கையில் உரிமைகள் இல்லாவிட்டால் இலங்கையில் தமிழனுக்கு எதிர் காலத்தில் விமோசனமே இல்லை. அழிந்தொழிந்து போக வேண்டியது தான்.

''நாம் நடத்துகின்ற போராட்டம் சிங்கள மக்களுக்குக்கெதிராக நடத்தப்படுகின்ற போராட்டம் அல்ல. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் அநீதிகளை எதிர்த்தே நமது போராட்டம் நடைபெறுகிறது. உரிமை கிடைக்கும் வரை போராட்டம் நடைபெறும்'' — என்பதே அவர் தந்த விளக்கம்.

(வளரும்)

தந்தை செல்வா நினைவுக் கட்டுரை



சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## எதிரொலி

● மருதானைக் குண்டு வெடிப்பின் எதிரொலி — தமிழ்ப் பொலீஸ் அதிகாரிகள் கொழும்பிலிருந்து வெளியிடங்களுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

★ இன்னுமொரு குண்டு வெடித்தால், கொழும்பிலுள்ள பொதுமக்களும் இடமாற்றஞ் செய்யப்படுவார்களோ?.

● உத்தரப் பிரதேச கவர்னர் றொமேஷ் பண்டாரி தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

★ வெளியேற்றப்பட முன் வெளியேறிவிட்ட புத்திசாலி!

● உள்நாட்டுப் போர் இந்த ஆண்டிற்குள் முடிந்துவிடும் — ஜனாதிபதி.

★ ''இன்று கடன் இல்லை'' என்று கடைகளில் எழுதி வைத்திருப்பதைப்போல், ஜனாதிபதி மாளிகையில் இதை எழுதி வைத்திருக்கலாமே!

● பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி அமைப்பதைத் தடுக்க நஞ்சு குடிக்கவும் தயாராக உள்ளதாக லாலு பிரசாத் யாதவ் அறிவித்திருந்தார்.

★ இந்தியாவில் நஞ்சிலும் கலப்படம் இருந்தே தீரும் என்ற நம்பிக்கையிலேதான் அப்படிக் கூறினாரோ?.

● தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு, நடுவு நிலைமை வகிப்பார்.

★ மதின் மேற் பூனையாக இருப்பார் எனத் திருத்தி எழுதுங்கள் என்கின்றார் மரபு வழித் தமிழ்ப் பண்டிதர் ஒருவர்.

● ஈராக் அதிபர் குற்றவாளி என அமெரிக்கா அறிவிப்பு.

★ உலைப்பாணை கறுப்பாக இருக்கிறதென [illegible] செய்ததாம் கேத்தில்!

— இடியன்

## பண்புள்ள சபையில்பாங்கான நாடகம்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவரின் விழிச்சுடர் என்ற நாடகம் சென்ற ஞாயிற்றுக்கிழமை (15. 03. 1998) வதிரியில் வட. மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த சுவைஞர் பார்த்து பரவசமடைந்த பாங்கான நாடகம் அதுவாகும்.

எக்காலத்துக்கும் எந்த நாட்டிற்கும் ஏற்ற சங்கதி உள்ள நாடகம் விழிச்சுடர். கொடுமையும், சூழ்ச்சியும், தீமையும் சொந்த ரூபத்தில் மட்டுமல்ல, அழகான தோற்றத்துடனும் போலியான ஐசுவரியத்துடனும் வரலாம். ஆனால் முடிவில் அது அழியும் என்ற சங்கதி அது.

தீதும் நன்றும் தனி மனித குணங்களாகலாம், ஒரு சமூகத்தின் நடைமுறைகள் ஆகலாம், நாட்டின் நியதியாகலாம். இதனைப் பார்ப்போரின் சிந்தனைக்கு விடுவதாக [illegible] அமைக்கப்பட்டுள்ளன.

ராஜா ராணி, அரக்கர், சூனியக்காரி, விவசாயிகள்; அவர்களுக்கு கவர்ச்சியான ஆடை, அலங்காரம்; மிகவும் பொருத்தமான பின்னணிச் சங்கீதம், ஓசை ஒலிகள் கொண்டு நாடகம் தயாரிக்

**கலைச்சுடர்**

கப்பட்டதால் மகிழ்ச்சிகரமான பொழுது போக்குக்கும் கவர்ச்சி உயர்தரமாக இருந்தது.

ஒரு நிமிடமேனும் நாடகம் தொய்யவில்லை. அதனால் சாதாரணமாக இரண்டு மணி நேரம் எடுக்கும் நாடகத்தை ஒன்றே கால் மணி நேரத்தில் ஓட வைத்து விட்டார்கள்.

கலைப் பீடத்தில் நாடகமும், அரங்கியலும் கற்கும் சிரேஷ்ட மாணவரான தேவானந் எழுதி நெறியாள்கை செய்து, விஞ்ஞானம் படிக்கும் மாணவர் நடித்த இந்த நாடகம், பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு பீடங்களின் ஒன்றிணைப்பு முயற்சிகளால் வரக்கூடிய பலாபலன்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. நெறியாளர் விசேஷமான பாராட்டுக்குரியவர்.

வதிரியில், வசதிகள் மிகவும் குறைந்த பாடசாலை மண்டபத்தின் மத்தியிலே, மாணவர்கள், கிராம மக்கள், சிறிய நகரின் சாதாரண

### 'நந்தி'

பொதுமக்களுடன் இருந்து, அவர்களுடன் சேர்ந்து ரசிப்பது ஓர் அநுபவமாக இருந்தது.

பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்திலே விசேஷமான முன் சீற்றில் இருந்து நாடகத்தைப் பக்குவமாகப் பார்க்கும் சந்தர்ப்பம் அரிது. நாடகம் பார்க்கும் போது விசில், இடை இடையே சபையிலிருந்து வேண்டாத

( 8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 16 பேருக்கு ஆசிரிய நியமனம்!

யாழ்ப்பாணம், மார்ச் 22
குறிப்பிட்ட சில பிரதேசங்களில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளுக்கு தமிழ் மொழி மூல தகுதிகாண் ஆசிரியர் பதவிக்கு மேலும் 16 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் உடனடியாக யாழ். கல்வித்திணைக்களம் வலயம் ஒன்றிற்கு வருகை தந்து தமது கடமையைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

யாழ். பிரதேச செயலர் பிரிவில் வி. லொற்றிசியா, எம். எஸ். ரோக், பி. நர்மதா ஆகியோரும் —

நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் ஆர். பிரியதர்சினி, கே. வினோதினி, எஸ். சாமினி, எஸ். பிரசாந்தி ஆகியோரும் —

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில், பி. பாஸ்கரன், என். பாலச்சந்திரன் ஆகியோரும் —

தீவுப் பகுதி வடக்கிற்கு ஆர். ஜெயகுமார், யு. சர்வாம்பிகை, ஏ. சிவநேசன் ஆகியோரும் —

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கே. மலர்விழி, ரி. எழிலினி, எஸ். கோகிலநிர்மலி, எம். கலைச்செல்வி ஆகியோருமே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

(ஐ-9)

# நந்தவனத் தொண்டாற்றிய நல்லடியார் கதிர்காமு அப்பு

மெதுவான நடை; மேனியெங்கும் விபூதிக்கோலம். கையில் பூமாலைகளோடு கனத்த உருவம் ஒன்று கோயில் விழாக் காலங்களில் கொக்குவில், ஆனைக்கோட்டைப் பகுதிகளிலுள்ள தலங்களில் முன்னவராக வலம் வரும். அப்பேருருவத்துக்கு அருகில் படித்தவர்கள், பக்திமிக்கவர்கள் கூடி நிற்கக் காணலாம். புராணங்களுக்குப் பொருள் சொல்லும் ஆற்றலும், சோதிடம் முதல் பூசைக் கிரமங்கள் பற்றி விளக்கம் சொல்லும் ஆற்றலுமுடைய அத்திருவுருவம் தான் அமரத்துவம் பெற்ற ஆனைக்கோட்டை கதிர்காமு அப்பு.

புன்னகையான முகத்தோடு வாழ்நாள் முழுவதும் இறை பூசைக்கு நந்தவனத் தொண்டு ஆற்றிய நல்லடியவர் இவர். தனக்கு என எதையும் கருதாது, தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியோடு இறைபணிக்குத்தன் வாழ்வைஅர்ப்பணித்தவர்.

## நீத்தார் பெருமை

தெய்வத்திருத் தலங்களில் நறுமணம் வீசும் மலர்களால் இறை பூசை நடைபெற வேண்டும் என்பது இவரது தணியாததாகம். அத்தாகத்தை நினைந்து யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களில் திருநந்தவனத்தை ஏற்படுத்தியவர் கதிர்காமு அப்பு அவர்கள். ஆலய வீதிகளில் நிழல் மரங்கள், விருட்ச மரங்களைக் கொண்டு வந்து நடுவது மட்டுமன்றி நியமம் தவறாது தண்ணீர் ஊற்றிக் காத்தவர் இவர்.

நைஷ்டிக பிரமச்சாரியாக வாழ்ந்த கதிர்காமு அப்பு தான் வாழ்ந்த குடிசைக்கு அருகில் நந்தவனம் அமைத்து மருக்கொழுந்து முதல் பல வகையான மலர்தரும் மரங்களை உண்டாக்கி இறக்கும் வரை பாதுகாத்தவர். பாதயாத்திரையாக நடந்து பல ஆலயங்களையும் தரிசிக்கும் பண்பினையுடைய அப்புவுக்குப் பல ஆன்மீகப் பெரியவர்களின் தொடர்பு இருந்தது. அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி முதல் சிவநெறிக்காவலர் கனகராசா போன்ற சமூகத் தொண்டர்களோடு நெருக்கமான தொடர்பு அவருக்கு இருந்தது.

கோயில்களின் அற்புதங்கள், வரலாறுகளை அவர் ரசித்துச் சொல்லும் காட்சி பழகியவர்கள் நெஞ்சில் நிறைந்து நிற்கிறது. புண்ணியப்பணியாற்றி, எவர்க்கும் இன்முகம் காட்டி வாழ்ந்த கதிர்காமு அப்பு காலமானார் என்ற செய்தி மனதை வருத்துகிறது. பூந்தொண்டு செய்த அந்த புனித ஆத்மாவை இனி எங்கு காண்பது? இறக்கும் தறுவாயில் ''தன் குலதெய்வங்களின் தீர்த்தத்தை எடுத்து வந்து எனது நாக்கிலும், கொள்ளிக்குடத்திலும் சேருங்கள்'' என்று சொன்ன கதிர்காமு அப்புவின் பக்தி வைராக்கியத்தை எப்படிச் சொல்வேன்.



''யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஓர் வாய் உறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன் உரை தானே''

என்ற திருமூலர் வாக்குக்கு அமையத் தன் வாழ்வை அமைத்த அமரர் கதிர்காமு அப்பு இறைவன் திருவடியை அடைவார் என்பது நம்பிக்கை.

- ஆறு.திருமுருகன்

# இனங்களுக்கிடையே சந்தேகத்தை நீக்குவதற்கு ஜனாதிபதி முயற்சி

## அநுராதபுரம் மாவட்ட எம்.பி. உரை

வடமராட்சி, மார்ச் 22
நாட்டிலுள்ள தமிழ், சிங்கள மக்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்து மக்களை ஒற்றுமையாக வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு உண்டு.

அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸகரலியத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் வதிரியில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தையும், நீதிவான் நீதிமன்றத்தையும், பருத்தித்துறையில் மக்கள் வங்கிக் கிளைகளையும் திறந்து வைக்கும் வைபவத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை முற்பகலும் நண்பகலும் நடைபெற்ற இத்திறப்பு விழா வைபவங்களில் கரலியத்த பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவற்றைத் திறந்து வைத்தார்.

இரண்டு வைபவங்களிலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

யுத்த பூமியாக விளங்கிய யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சமாதானம் கிடைத்துள்ள இவ்வேளையில் இந்தப் பூமிக்கு வந்து உங்களைச் சந்திப்பதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். யாழ்ப்பாண மக்கள் தமது அன்றாடக் கருமங்களைச் செய்வதற்கு நீதிமன்றத்தையும், வங்கிக் கிளையையும் இன்று திறந்து வைத்துள்ளோம். யாழ்ப்பாண மக்களின் கஷ்டங்கள், பிரச்சினைகளை நாம் தீர்க்கவுள்ளோம். பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை வரை யாவரும் இனபேதமின்றி ஒற்றுமையாகக் கைகோர்த்து வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நீதிக்கு மதிப்புக் கொடுக்கும் சமுதாயம் தான் சிறந்த சமுதாயமாக வாழ முடியும். நீதிக்கு மதிப்புக் கொடுக்காத சமுதாயம் முன்னணிச் சமுதாயமாக வாழ முடியாது.

வடக்கு மக்கள் பெரிதும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இதே போல மதவாச்சி, ஹொரவப்பொத்தானை, பொலநறுவை, மொனராகலை போன்ற பகுதிமக்களும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இக் கஷ்டங்கள் நாடுமுழுவதும் பரவி வருகின்றன. இந்நிலை படிப்படியாக நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது தான் இலங்கையின் இன்றைய நிலைக்கு வழி வகுத்தது. ஜனாதிபதி பதவிஏற்று தூரதிஷ்டியான நோக்கில் செயற்பட்டதால் நாட்டை அழிவிலிருந்து பாதுகாக்கக் கூடியதாக இருந்தது. ஜனாதிபதியின் செயல்களினால் நாம் அதிக நன்மைகள் அடைந்தோம். இந் நாட்டில் ஏற்பட்டுள்ள நிகழ்வினால் எதிர்காலத்தில் தமிழ் சிங்கள மக்கள் ஒன்றாக வாழ்வோம். நாட்டில் ஏற்பட்டுள்ள தாக்கத்தினால் தமிழ் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டோம். நாம் தனித்துப் போவதா கைகோர்த்துப் போவதா என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும்.

அரை நூற்றாண்டில் இரு தீர்வுத்திட்டங்கள் நாட்டில் கொண்டுவரப்பட்டன. தற்போது ஜனாதிபதியும் தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார். இதனை நாம் முன்னெடுத்துச் செல்லவேண்டும். இத்தீர்வுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் யாழ். மக்கள் பெரும் நம்பிக்கையுடன் ஒரு தீர்மானமான வழியில் அடியெடுத்து வைப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

கடந்தகால இன்னல்களையும் துயரங்களையும் மறந்துவிட்டு நாட்டின் பிரஜைகளாக வாழ்வோம். இலங்கையில் சட்டத்தை மதிக்கும் சமுதாயமும் நாம் எதிர்பார்க்கும் சமாதானமும் சுபீட்சமும் விரைவில் ஏற்படும்.

யாழ். மக்களின் கல்வித்தரம் அரை நூற்றாண்டுக்கு மேலாக உயர்ந்திருந்தது. இங்கு கல்வி கற்ற மைத்திரிபாலசேனநாயக்கா, கே. பி. இரத்தினாயக்கா ஆகியோர் இன்று அரசியலில் முன்னணி வகிக்கிறார்கள். அவர் இங்கு கல்வி பயின்று முன்னுக்கு வந்ததையிட்டு சந்தோஷமடைகின்றேன், யாழ். மக்களின் கல்வி, விவசாய, பொருளாதார வாழ்க்கைத் தரம் உயர வாழ்த்துகின்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-173)

# சூழல் அபிவிருத்தி பற்றிய ஆய்வுப்பட்டறை

சூழல் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுப் பட்டறை ஒன்று எதிர் வரும் நாளையும் நாளை மறுதினமும் யாப்பாணத்திலுள்ள ஐ. நா. அபிவிருத்தித்திட்ட (யு.என்.டி.பி) நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உயிரினங்களின் பன்முக அழிவு, பூமி வெப்ப நிலையேற்றம், ஓசோன் படை தேய்வுறுதல், சர்வதேச சமுத்திரங்கள் மாசடைதல் போன்ற விடயங்கள் பற்றி இந்தப் பட்டறையில் ஆய்வு செய்யப்படும். (ஐ-5-ரீ)


# கேள்வி அறிவித்தல்

## கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம் வலயம் - 1

98-03-10, 98-03-11 ஆகிய திகதிகளில் உதயன் இதழ்களில் பிரசுரமான கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள வண்ணமே கேள்விப்பத்திரம் **98 - 03 - 24** ஆம் திகதி முற்பகல் **10. 00** மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டுமாயினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் கேள்விப்பத்திரம் அன்றைய தினம் **10. 30** மணிக்கு திறக்கப்பட மாட்டாது என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதற்குப் பதிலாகக் கேள்விப்பத்திரம் **98- 04 - 09** ஆம் திகதி வியாழக்கிழமை காலை **10. 30** மணிக்கு திறக்கப்படும் என்பதனையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

நா. சுந்தரலிங்கம்,
கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம். வலயம் - 1

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
கல்வித்திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1998-03-21

(சி/3171)



# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விஞ்ஞானமானி (B. Sc.)

கல்விமானி (B. Ed.)

பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள யாழ். மத்தியகல்லூரியில் இயங்கும் அலுவலகத்தில் முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

யாழ். பிராந்திய இயக்குநர்

(54235)



# கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

வெள்ளவத்தையில் மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஸ்தாபனம்:

## ஹோட்டல் சீவம்ஸ் பிறைவேட் லிமிட்டெட்

என்பதை உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குளியல் அறைகளுடன் கூடிய தனி அறைகள் இருவர் தங்கும் அறைகள் சகாயமான நாள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

## HOTEL SEVAMS (PVT.) LTD.,

391/6, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO - 06. T. P. No. 591590

(54220)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 10ஆவது பிறந்தநாள் வாழ்த்து



★ ★ ★

**செல்வன் ம. பிரதீப்** (தீபன்)

வீமன்காமம் தெல்லிப்பழையைச் சேர்ந்த

**மனோகரன் யோகேஸ்வரி தம்பதிகளின்**

**அருந்தவப் புதல்வன் பிரதீப்**

தனது 10- வது பிறந்த நாளை (**22 – 03 – 98**) இன்று அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, பிரதாப் அண்ணா, சித்தப்பா, சுகந்தா அன்ரா, இந்துச் சித்தப்பா, குஞ்சன்ரா, பிரபு, கௌதா ஆகியோருடன் கொக்குவிலில் தற்காலிகமாக வசிக்கும் இல்லத்தில் . கொண்டாடுகிறார். இவரை கொழும்பு அத்தை மாமா, ஆசை மாமா, மாமி, மச்சாள் மார், விசுவமடு பெரிய மாமா, மாமி, உமா மச்சாள், ஜேர்மனி பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணா, சுவிஸ் அச்சாப் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், சர்மி, கனடா சித்தப்பா, சித்தி, அக்காமார், கனடா சின்னமாமா, மாமி, வாசன் மச்சான், சலூதி சந்து சித்தப்பா, நோர்வே சுரேன் அத்தான் குடும்பம் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் காசி விநாயகரினதும், மாவை கந்தனினதும், துர்க்கை அம்பாளினதும் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீருஞ் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
இ. மனோகரன்
(தகப்பன்)

பிரம்படி லேன்,
கொக்குவில்.

(54994)

## கண்ணீர் அஞ்சலி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
முன்னாள் ஆசிரியர்

அமரர்

**பண்டிதர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை**

அவர்களின் மறைவு பற்றிய வானொலிச் செய்தியினால் பேரதிர்ச்சியும், வேதனையுமடைந்தோம். எமது கல்லூரியில் பல ஆண்டுகள் சேவையாற்றி சிவபதமடைந்த அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தவர்கட்கு எம் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,

**அமெரிக்கன் மிஷன் கல்லூரி,**
**உடுப்பிட்டி.**

(54218)

பட்டதாரிகளுக்கு

# போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் வழங்குவதென்ற முடிவுக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

வேலையற்ற பட்டதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சை மூலமே ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று வடக்கு – கிழக்கு மாகாணசபையில் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எப்போதும் நடைமுறையில் இருக்காத இந்தப் புதிய முடிவுக்கு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப சங்கத்தினர் மாகாண சபையின் முடிவுக்குக் கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு போட்டிப் பரீட்சை நடத்தவுள்ளதாக வடக்கு – கிழக்கு மாகாண சபை விடுத்த அறிவிப்பையிட்டு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்துள்ளது.

ஏனைய மாகாணசபைகள் தமது பகுதிக்குள் உள்ள பட்டதாரிகளை நேரடியாக ஆசிரியர் பதவிக்குள் உள்வாங்கும் பொழுது வடக்கு- கிழக்கு மாகாணசபை மட்டும் விசித்திரமாக போட்டிப் பரீட்சை நடத்த நினைப்பது பட்டதாரிகளை இழிவு படுத்தும் — அவர்களின் தகைமையைக் கேவலப்படுத்தும் — ஒரு செயலாகும்.

வழமையாக பட்டப் படிப்பை நிறைவு செய்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைப்படி நியமனங்கள் வழங்கப்படும். ஆனால் செல்வாக்குக் கலாசாரம் உடைய வடக்கு – கிழக்கு மாகாணசபை, தமக்குத் தெரிந்தவர்களுக்கு – உறவினர்களுக்கு - அண்மையில் பட்டப்படிப்பை நிறைவு செய்து பெறுபேறுகளைக் காத்திருக்கும் செல்வந்தர்களுக்கு – செல்வாக்குள்ளவர்களுக்கு —ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக மேற்கொண்ட ஒரு நரித்தந்திர நாடகமே இந்தப் போட்டிப் பரீட்சை அறிவிப்பாகும்.

*பட்டதாரி சான்றிதழ்கள் அர்த்தமற்றவையா?*

போட்டிப் பரீட்சை மூலம் தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதாயின் பல்கலைக்கழகங்கள் தேவையற்ற தொன்றாகி விடுவதோடு அவற்றால் வழங்கப்படும் சான்றிதழ்களும் அர்த்தமற்றதாகி விடும்.

மூவாயிரம் பேர் விண்ணப்பங்களை அனுப்பியதால் தான் போட்டிப் பரீட்சை நடத்த வேண்டியுள்ளதாக வ. கி. மா. சபை சாட்டுப் போக்குச் சொல்லலாம். ஆனால் 3,000பேர் விண்ணப்பிப்பதற்கும் வ.கி.மா. சபை தான் காரணம்.

ஏனெனில் விண்ணப்பத்துடன் பட்டதாரிச் சான்றிதழை இணைத்து அனுப்பும்படி கேட்டிருந்தால் 1997 ஆம்ஆண்டு டிசெம்பர் மாதம் இறுதிப்பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காக காத்திருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பித்திருக்க மாட்டார்கள்.

அத்துடன் 1993 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் பட்டம் பெற்றவர்களுக்கு டி. பி. விஜயதுங்கா ஜனாதிபதியாக இருந்தபோது (1994 இல்) 99 வீதமானவர்களுக்கு பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டது. அவர்கள் தற்போது பட்டத்துக்குரிய பதவியையும், சம்பளத்தையும் பெற்றுள்ளனர். இத்தகையவர்களில் பெருபாலானவர்கள் வேலையே எடுக்க முடியாத நாம் நாட்டில் கிடைத்த வேலையைக் கைவிடவும் தாம் விரும்பிய வேலை செய்வதற்காகவும் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

உண்மையில் 1994ஆம்ஆண்டிற்கு முன்னர் பட்டம் பெற்று வேலை கிடையாதவர்கள் ஒரு வீதமானவர்கள் தான். இது விடயங்களில் வ.கி.மா. சபை நேர்மையுடனும், இதய சுத்தியுடனும் செயற்பட்டிருந்தால் தேவையில்லாத பல விண்ணப்பங்களை தவிர்த்திருக்கலாம், தடுத்திருக்கலாம்.

*போட்டிப் பரீட்சை*

மேலும் 1996 ஆம் ஆண்டில் நடந்த போட்டிப் பரீட்சையில் இருந்து ஏராளமாக தமிழ்மொழிமூல ஆசிரியர்களை குவித்த வ.கி.மா.சபை பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கத் திண்டாடுவதை தமிழ்ச் சமூகம் நன்கு அறியும். தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காகப் போட்டிப் பரீட்சை நடத்துவதாக இருந்தால் அதிக புள்ளி பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்காமல் குறைந்த புள்ளிகள் எடுத்தவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது எப்படி? இதே நிலைதான் பட்டதாரிகளுக்கான போட்டிப் பரீட்சையிலும் நடக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

போட்டிப்பரீட்சை நடத்த முற்படும் செயல் வேலையில்லாப் பிரச்சினைக்குத்தீர்வாக அமையாது என்பதுடன் அது தேவையற்ற — விரும்பத்தகாத நிகழ்ச்சிகளையே ஏற்படுத்தும்.

எனவே இது விடயத்தில் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள், வ.கி.மாகாணசபையின் பொறுப்பான அதிகாரிகள், பேராசிரியர்கள், அறிஞர் பெருமக்கள் தலையிட்டு பட்டப்படிப்பை நிறைவு செய்த ஆண்டின் ஒழுங்கில் ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, சகல வேலையற்ற பட்டதாரிகளுக்கும் ஒரே காலத்தில் வேலை வழங்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் எனவும் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தார்மையான வேண்டுகோளை முன் வைக்கிறது —என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள் வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள்; மாதவிடாய்க்குத்து இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி,
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(53793)

# பொது வைபவங்களுக்கு யாழ். நகரில் 'சிற்றி ஹோல்'!

விழாக்கள், கலந்துரையாடல்கள் போன்றவற்றை நடத்துவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தினரால் ''சிற்றி ஹோல்'' ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

முஸ்லிம் வட்டாரத்தில் ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள ஒரு காணியிலேயே இது அமைக்கப்பட்டு வருகின்றது. பள்ளிவாசலுக்கு அருகில் அமைந்துள்ள மலாயன் ஒய்வூதியர்களுக்கான ஒரு காணி யாழ். பல்கலைக்கழகத்தினருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காணியிலேயே இப்போது ''சிற்றி ஹோல்'' அமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ். நகரப் பகுதியில் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், விழாக்கள் போன்றவற்றை நடத்தக்கூடியவாறு பொதுவான மண்டபம் ஒன்று இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் விழாக்கள் போன்ற நிகழ்வுகள் பாடசாலை மண்டபங்களிலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டே இந்த மண்டபத்தை தாம் அமைப்பதாக யாழ். பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மண்டபத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன. இம் மண்டபத்துக்கு தேவையான தளபாடங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவை வந்து சேர்ந்ததும் பெரும்பாலும் புதுவருட தினத்திற்கு அண்மியநாள்களில் இந்த மண்டபமும் திறந்து வைக்கப்படும் என அறிய வந்தது.

(ஐ-9)

**கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!**

சகல வசதிகளுடனும் தங்குவதற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்:

**ஏ. கே. பி. லொட்ஜ்** ( சுலைமான் ஆஸ்பத்திரிக்கு முன்பாக )

என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

T. P. NO:- 075330356
075330354

**A. K. B. LODGE**, 9 GRANDPASS ROAD, COLOMBO – 14

(54223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி

இறைச்சிகக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் கிடைக்கும் (காலை தொடக்கம் மாலை வரை). Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely. [54202]

இறைச்சிக்கோழி Broiler விற்பனைக்குண்டு. வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள்உண்டு. தொடர்பு: இல. 101, இலுப்பையடிச் சந்தி அருகில், பலாலிறோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். [54211]

புறோயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. இல. 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டர் முன்பாக, [54226]

புறோயிலர் இறைச்சிக் கோழி சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனைக்குண்டு. கிலோ 140 ரூபா. தொடர்பு: அருள்ஆச்சிரமம், இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [54230]

### மணமகன் தேவை

யாழ். கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 26, A/L (Bio) சித்தியடைந்த அழகிய பெண்ணுக்கு அரச சேவையில் உள்ள மணமகன் தேவை. கிறிஸ்தவ கத்தோலிக்கர் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சியான சீதனம் வழங்கப்படும். புகைத்தல், குடிப்பழக்கமற்ற சகோதரர், வயது 25, B.Sc. Engineer, உடன்மாற்றுச் சம்பந்தமாகவும் செய்யலாம். C/o 717, உதயன், யாழ்ப்பாணம். [54167]

### மலிவு விற்பனை

சார்மனைக்கதிரை, அலுவலக மேசை, அலுமாரி மேசை, வாங்கு, பெட்டகம், தையிலாப்பெட்டி, பலகைகள், செப்புக்கிடாரங்கள், பித்தளைச் சருவங்கள், குத்துவிளக்கு மேலும்பல பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; சு. கதிரித்தம்பி. 16/5, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், [54222]

### சிங்களம்

சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் 28-03-98 அன்று ஆரம்பமாகும். பிரத்தியேக வகுப்புக்களும் ஒழுங்கு செய்யலாம். விவரங்களுக்கு, T. SAGATHEVAN, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [54155]

### வகுப்புக்கள்

தமிழ் ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. அனுமதிகளைப் பெறவும். தொடர்பு: R. மருதலிங்கம், 116, பலாலிவீதி' (கராச் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். [54163]

### விற்பனைக்கு

சாவகச்சேரி, பெரியமாவடி. உப்புக்கேணி வீதியில் சிறு வீட்டுடன் 2½ பரப்புக்காணி உடன் விறபனைக்குண்டு. தொடர்பு: சாவகச்சேரியில் வ. விஜயநாதன், உப்புக் கேணி வீதி, பெரியமாவடி, யாழ்ப்பாணத்தில்: 28, யாழ். றோட், பெருமாள் கோயிலடி. [54205]




தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்
▶ போட்டோ பிரதிகள்
▶ லமினேட்டிங் (கவரிடுதல்)

நாடவேண்டிய இடம்:

**அருண்**

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## அந்தண மாணவர்கட்கு

1997 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை க.பொ.த.ப. (உ/த) பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த அந்தண மாணவ, மாணவிகள் தங்கள் பெயர், முகவரி பெற்றுள்ள சித்தியின் விவரங்கள் ஆகியவற்றை 98-03-31 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக


இல. 719,
மே/பா "உதயன்"
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி/3169)

## உள்ளம் நிறைந்த உறவுகளே!

# உணர்வு நிறைந்த அஞ்சலிகள்!



அமரர்
**சதாசிவம் நடராசா**
மண்ணில்: 10 – 03 – 1926
விண்ணில்: 30 – 11 – 1995



திருமதி
**நடராசா நாகேஸ்வரி**
(தங்காள்)
மண்ணில்: 22 – 03 – 1927
விண்ணில்: 14 – 03 – 1997



அமரர்
**நடராசா சிற்சபேசன்**
(அம்பி)
மண்ணில்: 15 – 01 – 1953
விண்ணில்: 21 – 02 – 1998

உள்ளம் நிறைந்து உணர்விற் கலந்து
உறவிற் றிழைத்த எம் தெய்வங்களே!
வெள்ளம் என்றிங்கு கண்ணீர் நாம் சிந்த
வேதனை தனையீந்து எங்குற்றீர் .........?

தந்தையாய், தாயாய், தலைவராய், உடன்பிறப்பாய்
சிந்தையில் நிறைந்திட்ட தீபங்களே!
வெந்துயர் தந்திந்த மூவாண்டு காலத்துள்
விண்ணமருந் தெய்வமாய் ஆனீரே!

பாசம் மறவாத பல்கோடி அஞ்சலிகள்
பரனடியில் நீரமரப் படைத்தோம் சாந்தி கொள்க.

செருக்கற் பிள்ளையார் ஒழுங்கை,
டச் வீதி, சாவகச்சேரி.

(சி/3151)

உள்ளம் நெக்குருகும்
**உறவினர்கள்**

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

## நேர்முகப் பரீட்சை

1. விலங்கியல்/ தாவரவியல்/ இரசாயனவியல்/ பௌதிகவியல் ஆகிய துறைகளுக்கான தற்காலிக விரிவுரையாளர்/ செய்முறைக் காட்டுனர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை 1998 – 03 – 23 அன்றும்,
2. கணிதமும் புள்ளிவிவரவியலும்/ கணனி விஞ்ஞானம்/ கணனிப் பிரிவு ஆகிய துறைகளுக்கான தற்காலிக விரிவுரையாளர்/ போதனாசிரியர் பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சை 1998 - 03 – 24 அன்றும் பல்கலைக்கழக இராமநாதன் மண்டப அறையில் நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்த தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு ஏற்கனவே தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகின்றோம்.

- பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்
1998 – 03 – 20

(சி-3165)


**கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!**

# ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்!

கொழும்பில் தங்குவதற்கு மிகச்சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும், இரண்டுபேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்: **HOTEL SEIVAMS** (GUEST HOUSE) No. 29A, SANGAMITHA MAWATHA, KOTAHENA, COLOMBO - 13.
T. P. No. 326522

(54221)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பாலைவன அபாயம்!

வெயில் நாள் முழுவதும் கொளுத்துகிறது. பொழுது சாயும் வரை ஒரே வெக்கையும் வெப்பமுமாக அனல் எறிக்கிறது. காலையில் சூரியன் உதித்தவுடனேயே உடம்பு எரிகிறது!. முன்னைய ஆனி, ஆடி, ஆவணி மாதங்களின் கடுங் கோடை போன்ற பருவ காலமாகத் தோன்றுகிறது.

பருவ காலங்களில் இப்போது பெரும் மாற்றம் உண்டாகி வருகிறது. சென்ற மாரி காலத்தில் குடாநாட்டில் மழைவீழ்ச்சி பெரிதும் குறைந்து காணப்பட்டது. பின்மாரி இல்லாததால் நெல் விளைச்சல் குறைந்து போயிற்று.

இந்த வருடம் கடும் வரட்சி குடாநாட்டைப் பாதிக்கும் என்று அஞ்சப்படுகிறது. "எல்-நைனோ"வின் தாக்கத்தினால் இலங்கையும் பாதிப்புறும்— கடும் வரட்சிவரும் — என்று சூழலியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

வடக்கு இயற்கையாகவே வரண்ட பூமி. கோடையிலே இளைப்பாற குளிர்தரு தருக்களாவது முன்னர் உதவின. ஆனால் இப்போது அவையுமில்லை. போரின் காரணமாக பல்வேறு தேவைகள் கருதி மரங்கள் அழிந்து விட்டன — அழிக்கப்பட்டு விட்டன. போரின் மறைமுகமான — நீண்ட காலப் பாதிப்பைத் தரும் — பாதிப்புகளில் மரஅழிப்பு முதன்மையானது.

இதன் பாதிப்பை உணராதவர்களாகக் குடாநாட்டு மக்கள் சட்டவிரோதமாக — உரிய அனுமதி இன்றி — இப்போதும் மரங்களை வெட்டி வருகிறார்கள்! விறகு மற்றும் தளபாடத் தேவைகளுக்கென்று கண்டபடி தறித்துத் தள்ளுகிறார்கள்.

தளபாடங்களுக்குரிய மர வகைகளை மரக் கூட்டுத்தாபனம் கொழும்பிலிருந்து கொண்டு வந்துள்ளது. எனினும் மீளக்குடியமராதவர்களின் வீடுகளில் உள்ள பெறுமதி மிக்க மரங்களே தளபாடத் தேவைக்காக வெட்டிச் சரிக்கப்படுகின்றன.

ஏற்கனவே ஏற்பட்ட மர அழிவு இழப்பை ஈடு செய்வதற்கு மரம் வளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு குடாநாட்டுக் குடிமகனுக்கும் உண்டு. ஆனால் அந்தக் கடமையைச் செய்வதற்குப் பதிலாக, மரங்களை வெட்டுகிறார்கள்.

போரால் எமது பிரதேசம் அழிந்து போயிற்று என்று கவலைப்படுவது ஒரு புறமிருக்க, மேலும் அழிவுகளை, நீண்டகாலப் பாதிப்புகளைத்தரும் தேசவிரோதச் செயல்களை எம்மவர்கள் செய்து வருகிறார்கள். வெயில் சூட்டைவிட மனதை வேக வைக்கும் வெப்பமாக உள்ளது இது!

மரங்களை இந்த வேகத்தில் அழித்துக் கொண்டு, அவற்றை நடுவதைப் புறக்கணித்து வருவோமாயின், இஸ்ரேல் நிபுணர்கள் முன்னெச்சரிக்கை செய்தது போல, யாழ்ப்பாணம் பாலைவனமாகாது வேறு எதுவாகும்? நாங்கள் படித்த சமுதாயத்தினர் என்று பெருமைப்படுவதால் என்ன பயன்? அர்த்தம் ஏதாவது உண்டா?

# மற்றவர்களுக்காக மனம் இரங்குவதால் ஒருவர் தன்னையே உயர்த்திக் கொள்கிறார்

இறைவனின் எல்லையற்ற இரக்கத்தை எமக்கு எடுத்தியம்ப இயேசு திருவாய் மலர்ந்தருளிய ஊதாரி மைந்தனின் உவமையைப் போல் எளிமையும், இனிமையும் கொண்ட பகுதியை நாம் வேறு எங்கும் காண முடியாது.

தன்கடமையிலே கண்ணுங் கருத்துமாயிருந்து தொடர்ந்து பல்லாண்டுகள் தன் தகப்பனிடம் ஊழியம் செய்து வருகின்றான் மூத்த மகன். இளைய மகனோ தந்தையிடம் இருந்த சொத்தில் தனக்குரிய பகுதியைப் பெற்று, அதை விற்று நெடும் பயணம் மேற்கொண்டு அங்கு தாறுமாறாக வாழ்ந்து சொத்தையெல்லாம் பாழாக்கியவன். அறிவு தெளிந்தவனாய், அபலையாய், அனாதையாய் திரும்பவும் அண்டிப் பிழைக்க வருகிறான் தந்தையிடம். அவன்தொலைவில் வரும்போதே, அவனுடைய தந்தை அவனைக் கண்டு மனமுருகி ஓடிப்போய், அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டான்.

மன்னிப்பதில் தந்தை காட்டும் தாராளத்தை நற்செய்தியாளர் லூக்கா இங்கு நயம்பட விளக்குகிறார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? இது மட்டுமன்று 'மனமுருகி' என்ற பொருள் பொதிந்த சொல் உடல் உறுப்புக்களின் அசைவுகளைக் குறிக்கும். இறைவனின் மிகுந்த அன்பை, அளவுகடந்த இரக்கத்தைக் காட்ட இச்சொல் இங்கும், நற்செய்திகளில் மற்றிடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.

இயேசு ஆயனில்லா ஆடுகளைப்போல் மக்கள் இருப்பதைக் கண்டு அவர்கள் மேல் மனம் இரங்கினார் (மாற். 6: 34). நயீம் பட்டினத்து விதவையின் மகன் இறந்து பாடையில் வைத்துக்கொண்டு செல்கையில் இயேசு அவளைக் கண்டு அவள் மீது மனமிரங்கினார். (லூக் 7: 13). நல்ல சமாரியர் உவமையில் வருகின்ற சமாரியன், கள்வர் கையில் அகப்பட்டு அடிபட்டு விழுந்தவனைக் கண்டு அவன் மேல் மனம் இரங்கினான் (லூக்10: 33). இயேசு படகை விட்டு இறங்கியபோது பெரும் கூட்டத்தைக் கண்டு அவர்கள் மீது மனமிரங்கி, அவர்களுள் பிணியாளிகளைக் குணப்படுத்தினார் (மத் 24: 14).

'இரங்குதல்' இறைவனுக்குரிய பண்புகளில் மிகவும் முதன்மையானதாகும். மனந்திருந்தி, திரும்பிவரும் பாவியை இரக்க உருக்கத்துடன் இறைவன் ஏற்றுக்கொள்வதில் அவரும் ஒரு ஊதாரியே, ஊதாரித்தந்தை மட்டுமன்றி ஊதாரித் தாயுமாகின்றார்.

''பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ, பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ, அப்படியே பெற்றவள் தான்பிள்ளையை மறந்து விட்டாலும் நானுன்னை ஒருபோதும மறக்கமாட்டோம். இதோ நம் கைகளில் உன்னைப் பொறித்துள்ளோம்'' (இசை 49: 15–16) என்ற சொற்கள் நம் கடவுளின் இரக்கப் பெருக்கை, மன்னிப்பு வளத்தை தெளிவாகக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றதல்லவா?

இரக்கம் — அது என்ன? உலகை மீட்கக்கூடிய உன்னத ஆயுதம்இரக்கம், இனம், மொழி, நிறம், சமயம் அனைத்தையும் கடந்து செயலாற்றுவது இரக்கம். பிறருக்கு மனமுருகி இரக்கம் காட்டும்போது என்ன நடக்கின்றது? அவரிடம் உன் உள்ளம் செல்கிறது. உன் கரங்கள் அவருக்கு உதவ விரைகின்றன. அடுத்தவரின் வாழ்வில் நீ ஈடுபட விழையும் போது சில கட்டுப்பாடுகளை விட்டுக்கொடுக்கின்றாய். உலகில் மனிதன் எதிர்பார்ப்பதும், ஏங்குவதும் எதற்காக? அன்பிற்காக, இரக்கத்திற்காக!

இறைவனின் இரக்கத்தை நாம் அனைவருமே பெருங்கொடையாகப் பெற்றுள்ளோம். இலவசமாகப் பெற்றுக் கொண்டதை இலவசமாக கொடுக்கக்கூடாதா? அடுத்தவருக்கு மனமுருகி இரக்கம் காட்டுவதன் மூலம் மட்டுமே, நாம் நிறைவு பெறமுடியும் என்பது இதன் உள்ளுறை. நீ உன் வாழ்வில் ஏங்குவது எதற்காக? அடுத்தவரின் அன்பிற்காக. ஆறுதலுக்காக பிறர் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றாய். மற்றவருக்கு இதனை வழங்குகின்றாயா? இரக்கம் என்பது இறைவனின் இதயம். இதயத்தில் பிறக்கும் இரக்கம், மனமுருகிச்செயல்களாக மலர வேண்டும்.

அடுத்தவரை அனுதாபத்துடன் அணுகுவது, அவரில் இறைவன் பொழிந்துள்ள நலன்களைப் பாராட்டுதல், அவர்களது உணர்வுகளை அப்படியேபசிர்ந்துகொள்ளுதல், அவரின் கண்ணோட்டத்தில் நாமும் பங்கேற்பது, அவராக மாறுவது. இக்குணம் இன்மையாலேயே நம் சமூகப் பணிகள் வெறும் இரக்கப் பணிகளாக நின்று விட்டன, ஏழையரின் இதயத்தைத் தொடவில்லை. இரக்கம், இரந்தத்தைப் பார்த்தும் ஏற்படும் அனுதாப உணர்வல்ல; உடனடியாக உதவவேண்டும் என்ற உத்வேகம் மட்டுமல்ல; ஒருவர் மற்றவருக்காக மனமுருகி தன்னையே இழப்பது; மற்றவரது வாழ்விலே அப்படியே பங்கேற்க முயல்வது; இவையே மேற் குறிப்பிட்ட ஊதாரியின் தந்தையும், தன் இளைய மகன் பேரில் செயற்படுத்திக் காட்டினார். மேலோட்டமாக அல்ல, வேரோட்டமாக தன் இதயத்தில் மனமுருகினார்.

இன்று உன் வாழ்விலும் இரக்க குணம் உன்னிடம் இருந்தால் மன்னிப்பு எளிதாகும். மற்றவரது மனநிலைகள், கண்ணோட்டங்களைப் புரிந்துகொண்டால், உன் இயல்பிலேயே இரக்கம் மனமுருகிச் சுரக்கும். மற்றவரது நிலையில் வைத்து நீ உன் வாழ்வைத் தொடர். அவரது வாழ்வை வாழ்ந்து அவருக்கு வரும் சோதனை, வேதனைகளில் பங்கு கொண்டால் மனமுருகி மன்னிப்பு எளிதாகும்.

எஸ். அந்தோனிப்பிள்ளை

### உதயவாக்கு

பொறுமை என்பது ஒரு கசப்பான காய், ஆனால் அது கனிந்தால் மிக இனிமையானதோர் பழமாகும்.

-ரூசோ

# கூட்டுறவுச் சங்கப் பொருள்களை எடுத்துச் செல்வதில் சிரமங்கள்

நெடுந்தீவு, மார்ச் 22

தீவுப்பகுதியில் உள்ள பல நோ. கூட்டுறவுச்சங்கங்கள் தாங்கள் யாழ். நகரில் இருந்து எடுத்துச் செல்லும் பொருள்களுக்கு மேலதிக கிலோ ஒன்றிற்கு இரண்டு ரூபா வரை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். நகரில் இருந்து லொறிகள் மூலம் தமக்குத் தேவையான அத்தியாவசிய பாவனைப்பொருள்கள் மற்றும் இலவச நிவாரணப் பொருள்களையும் எடுத்துச் செல்லும் நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை பல நோ. கூ. சங்கங்களே இந்த மேலதிக செலவை எதிர் நோக்குகின்றன.

பொருள்களுடன் செல்லும் லொறிகள் முதலில் பண்ணை பாலத்தில் அனைத்துப் பொருள்களையும் இறக்கி பின்னர் பாலத்தின் மறு பகுதிக்கு தொழிலாளர்கள் அவற்றைச்சுமந்து சென்று லொறிகளில் ஏற்ற வேண்டியுள்ளது. பண்ணைப் பாதுகாப்புப் படையினரின் சோதனைக்காகவே பொருள்கள் இறக்கப்படுகின்றன.

முதலில் பண்ணைப் பாலத்தில் இறக்கி ஏற்றப்படும் பொருள்கள் மீண்டும் வேலணைத்துறையில் உள்ள சோதனைச்சாவடியில் இறக்கி ஏற்றப்படுகின்றன.

இதனால் நெடுந்தீவு, புங்குடுதீவு பல நோ. கூ. சங்கங்கள் மேலும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மேலதிக செலவுடன், தொழிலாளர்களையும் யாழ். நகரில் இருந்து கூட்டிச் செல்லவேண்டியிருப்பதுடன். அடிக்கடி ஏற்றி இறக்குவதால் பொருள் சேதாரங்களும் ஏற்படுவதாக சங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தைப் பொறுத்தவரை யாழ். நகரில் இருந்து எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் சங்கக் களஞ்சியத்தைச் சேர்வதற்குள் இடையில் ஆறு இடங்களில் அவற்றை ஏற்றி இறக்க வேண்டியிருக்கின்றது. (ஐ–111)

### நியமனம்

சண்டிலிப்பாய் மார்ச் 22

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற போது சங்கத் தலைவராக ச. செல்வரத்தினம் மீண்டும் ஏகமனதாகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக வி. சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் தலைமையில் இத் தெரிவு நடைபெற்றது. இயக்குநர் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ–135)

# ஆசிரிய கலாசாலை மாணவர்கள் வருகை

சுன்னாகம், மார்ச் 22

ஆசிரிய கலாசாலைகளுக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

''லங்கா முடித'' கப்பலில் திருகோணமலையில் இருந்து புறப்பட்ட இவர்கள் புதனன்று காங்கேசன்துறை வந்தடைந்தனர்.

இவர்களில் 68 பேர் கடந்த இருமாதங்களாக கப்பல் வசதியின்றி மன்னாரில் காத்திருந்தவர்களாவர். மேலும் 7 பேர் வவுனியாவில் இருந்து திருகோணமலை சென்று அங்கிருந்து வந்துள்ளனர்.

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரைகள் கடந்த ஜனவரி மாதம் 19ஆந்திகதி ஆரம்பமாகி விட்டமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை—

கப்பலை எதிர்பார்த்துக் காத்திருந்த சுமார் 10 ஆசிரிய மாணவர்கள் தமது பயணத்தைத் தொடராமலே தத்தம் வீடுகளுக்குத் திரும்பி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக மூன்று ஆசிரிய மாணவர்கள் குருநகரூடாக வந்து சேர்ந்தனர். இவர்களில் இருவர் பலாலி ஆசிரிய கலாசாலைக்கும் ஒருவர் கோப்பாய் ஆசிரியகலாசாலைக்கும் வந்துள்ளனர். (ஐ-27)

### யாழ். நகரில்

# பட்டினிக்கு எதிரான அமைப்பின் அலுவலகம்

பட்டினிக்கு எதிரானஇயக்கம் யாழ். நகரில் தனது கிளை அலுவலகத்தைத் திறந்துள்ளது.

1996 நவம்பர் தொடக்கம் இலங்கையில் திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய இடங்களிலும் இரண்டு வீட்டுத் தோட்டங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பின் வேலைத திட்டம் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில்பழச்செய்கையை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்படி அமைப்புக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

வறுமை நிலைமையிலுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களை பழச்செய்கையில் ஈடுபடுத்தி வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதே மேற்படி அமைப்பின் நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ–5-ரீ

### நாளை

பங்குனி 9

திங்கட்கிழமை

திதி: தசமி

மாலை: 7.12 வரை

நட்சத்திரம்: உத்தராடம்

முன்இரவு: 9.00 வரை

சுபநேரம்: 12.17-1.47

ராகு காலம்: 7.47–09.17

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இன்னலை ஓரளவிலேனும் குறைக்கக் குரல் கொடுப்போம்

## சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர்

தென்மராட்சி, மார்ச் 22 உள்ளூராட்சித் தேர்தலில், வாக்களித்து நாட்டில் சமாதானம் ஏற்படக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட வைத்த தென்மராட்சிப் பகுதி மக்களின் நம்பிக்கையை வீண்போகச் செய்யாமல் நீதியான. உறுதியான நிலையில் செயற்பட எமது கட்சி என்றென்றும் பாடுபடும்.

உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளால் உடனடியாகச் சமாதானத்தைக் கொண்டு வரமுடியாத போதிலும் எமது மக்கள் படும் இன்னல்களை ஓரளவேனும் குறைக்க எமது கட்சியின் குரல் நாடாளுமன்றம்வரை ஒலிக்கச் செய்வோம்.

இவ்வாறு இம்மாதம் 13ஆம் திகதி சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவராகப் பதவியேற்ற பின்னர் பிரதேச சபைத் தலைவர் பொன்னையா அன்ரன், கொடிகாமத்தில் உள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பொதுமக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது கூறினார்.

எமது பிரதேசத்தை மீண்டும் கட்டி எழுப்ப பிரதேச சபை நிர்வாகத்தின் மூலம் எம்மால் முடிந்த அளவு சேவையாற்றுவோம். எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பணியைச் செவ்வனே செய்து முடிக்க பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட ஏனைய கட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும்நாடி நிற்கிறோம் — என்றும்அவர் சொன்னார்.


பிரதேச சபைச் செயலாளர் வே. அருணந்தி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தென்மராட்சி பிரதேச செயலரும் முன்னாள் பிரதேச சபை விசேட ஆணையாளருமான பு. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ, புளொட் அமைப்பின் மாவட்ட அமைப்பாளரும் யாழ், மாநகரசபை உறுப்பினருமாகிய கிருபைராசா, பருத்தித்துறை நகரசபை உபதலைவர் வின்சன்ட் கென்னடி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் பிரதிநிதி உட்பட தென்மராட்சிப் பிரதேச வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்றினர்.

(அ-117)

## ஆதர் செல்வநாயகம் போல்
(உப அதிபர்)
அவர்களின்

### ஓராண்டு நினைவு நாள்

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.
(சங். 119:105



உலகிற்கு:
1951 — 11 — 08

கர்த்தரிடத்தில்:
1997 — 03 — 22

அன்புடனும், காருணியத்துடனும் சுயநலமற்ற முறையிலும், மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் உலகிற்குச் சேவை செய்த உமது உள்ளம் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரி, சகோதரர்கள்,
மைத்துனிமார்கள்.

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(54208)

## முதலாண்டு நினைவலைகள்



திருமதி
### தங்கவடிவேல் மகேஸ்வரி
(இளி)

மலர்வு:
25 — 07 — 1947

உதிர்வு:
04 — 03 — 1997

திதி: 22 — 03 — 1998

ஓராண்டு சென்றாலும் உம் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாதம்மா!

பிரிவால் நித்தம் வாடி நிற்கும்:
கணவன் க. தங்கவடிவேல்
(பிள்ளையார் மரக்காலை உரிமையாளர்),
பிள்ளைகள்: பிரகாஷ், பிறவுண்சன்
மருமகள் விக்கினேஸ்வரி (டில்லி)

பிள்ளையார் மரக்காலை,
மருதங்கேணி தெற்கு,
தாளையடி.

(54110)

## சஞ்சிகை வெளியீடு

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் 'லிங்' (தொடர்பு) சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று (ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் கழகத் தலைவர் லயன் செ. ஞானராஜா தலைமையில் நடைபெறும்.

இவ் வைபவத்தில் மானிப்பாய் பிரதேசத்தில் இயங்கும் ஐந்து பாலர்பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வசதிக்கானஉதவிப் பொருள் களும் வழங்கப்படவுள்ளன. (ஐ-135)

## பண்புகள்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

வசனங்கள், கடுதாசி 'ரொக்கட்டுகள்' சாதாரண மக்கள் கொண்ட சபையில், வதிரியில் இருக்கவில்லை.

ஆகவே சிறந்த ஒரு நாடகத்தை மக்களுக்குத் தந்த பல்கலைக்கழக மாணவருக்கும், வதிரியில் ''விழிச் சுடர்'' நடத்திய போது ஒரு பாடம் இருந்தது. நாடகம் பார்ப்போரின் சபைக்குரிய பண்பின் பாடத்தை சாதாரண மக்களும் சிறு பிள்ளைகளும் அவர்களுக்குப் படிப்பித்தார்கள். ★

## நூல் வரிசை

கடந்த வார சூரியகாந்தியில் ''தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் நெறியில் ஒரு புதிய பங்களிப்பு'' என்ற நூல் விமர்சனக் கட்டுரையை எழுதியவர்:
[illegible]

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பானது (25 - 03 - 1998) புதன்கிழமை வணிகத் துறையில் நடைபெறும். அதிர்ஷ்டசாலிகள் விவரம் பின்னர் உதயன் பத்திரிகை மூலம் அறியத் தரப்படும்.

வணிக மாணவர் மன்றம்
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(54227)

கந்தர்மடம்
## VICTORY விளையாட்டுக்கழகம்

10 ஆண்டு பூர்த்தியை ஒட்டி நடத்தும்
மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி

1] 11 பேர் 20 ஓவர்கள் கொண்ட விலகல் முறையில் அமையும்.
2] விண்ணப்ப முடிவுத் திகதி — 28 - 03 - 98
3] அணி ஒழுங்குத் தெரிவு — 29 - 03 - 98
4] விண்ணப்பக் கட்டணம் — 100/-

**அங்கர் மருந்தகம்**
இல. 114, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம் என்ற முகவரியில்
விண்ணப்பப் படிவங்களைப் பெறலாம்.

(54219)

## ஒன்றுகூடல் வைபவம்

உயர்கல்வி நிலையங்களில் கல்வி பயிலும்
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர்களின்
சமூக உறவுகளையும் கல்லூரியுடனான தொடர்புகளையும் மேம்படுத்தும் நோக்கமாக நடத்தப்படும் ஒன்றுகூடல் வைபவம்.

நாள்: 22 - 03 - 1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி. ப. 3-30 மணி (இலங்கை நேரம்)
இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி


இவ்வைபவத்தில் உயர்கல்வி பயிலும் பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அமைப்புக் குழு
கொக்குவில் இந்து பழைய மாணவர்கள்.

விளம்பர அன்பளிப்பு:
**CITY TAILORS**
(Specialists in Wedding Coats & Suits)
**சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்**
(புடைவைத் தினுசுகளின் ராஜமுத்திரை)
73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(54232)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
14 — 09 — 1972

மறைவு:
22 — 03 — 1996

செல்வன்
### சிவசம்பு சிவநேசன்

ஆண்டு இரண்டாய் ஆறாத் துயரில்
எம்மை ஆழ்த்தி விட்டு
ஆழ்ந்த துயில் கொள்ளும் அன்புச் செல்வமே!
ஆண்டு இரண்டென்ன ஈராயிரம் ஆண்டுகள் தான்
சென்றாலும் ஆறாது எம் துயரையா!

பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, அக்காமார்,
அண்ணாமார், தம்பிமார், தங்கை,
அத்தான்மார், அண்ணி, பெறாமகன்,
மருமக்கள்.

34, BA. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

[54229]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் விடுவிக்கப்படாத பகுதி
# மக்கள் அடிப்படை வசதி அற்ற நிலை

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ். குடாநாட்டில் படையினரால் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளைப் பெறமுடியாத நிலையிலுள்ளனர்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொழும்பிலுள்ள மனித நேய அமைப்புகளுக்கான இணையத்துக்கு அனுப்பி வைத்துள்ள யாழ். நிலவரம் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சியின் சில பகுதிகள், வலி வடக்கின் சிலபகுதிகள் ஆகியவற்றில் வாழும் மக்களே பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

வடமராட்சி கிழக்கிலிருந்து வெளியே வரும் ஒருவர் உள்ளே செல்லும் போது 500 ரூபா பணத்துக்கு மேல் கொண்டு செல்ல முடியாது. இது போன்று உணவுப் பொருள்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட பகுதிகளில் மருத்துவ வசதிகளின்றி மக்கள் துன்பத்தையே அனுபவித்து வருகின்றனர். பச்சிலைப்பள்ளியிலும் சில பகுதிகளில் அங்கு வாழும் மக்களைத் தவிர வேறு எவரும் உள்ளே செல்ல முடியாது.

யாழ். மாவட்டத்தில் அரச அதிபரின் கூற்றுப்படி அரச நிறுவனங்களில் 12 ஆயிரம் பேருக்கான வெற்றிடங்களும், பாடசாலைகளில் 5 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும் இதனைவிட வங்கிகளிலும் பல வெற்றிடங்களும் இருக்கின்றன.

இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் நிர்வாகத்தை சிறப்பாக நடத்த முடியாதுள்ளது. வெற்றிடங்களை நிரப்பக் கூடிய தகுதியும் ஆற்றலும் கல்வித் தகைமையும் உடையோர் யாழ். மாவட்டத்தில் இருக்கிறார்கள். அரசு இந்த விடயத்தில் பாராமுகமாக இருக்கிறது.

உள்ளூராட்சி சபைகளும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் தளபாடம் மற்றும் வசதிகள் இன்றி இருக்கின்றன.

புனர்வாழ்வு. புனரமைப்பு வேலைகளில் அடிப்படை வசதிகள் இல்லாமல் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

பாடசாலைகளில் மாணவர் வரவு ஓரளவு திருப்தியாக இருந்தாலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலுள்ள மாணவர்கள் வசதியீனம் காரணமாக பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையிலுள்ளனர்.

தெல்லிப்பழையிலுள்ள பாடசாலை ஒன்றில் பொது சுகாதாரப் பரிசோதகர் பி. சீ. ஜீ. தடுப்பு மருந்து ஏற்றுவதற்குச் சென்ற பொழுது காலை உணவை உட்கொள்ளாமல் பல மாணவர்கள் இருந்தமையினால் மருந்து ஏற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

இதேவேளை 1994, 1995, 1996 ஆம் ஆண்டுகளில் பட்டம்பெற்ற பல பட்டதாரிகள் வேலையற்றுஇருக்கிறார்கள்.

யாழ். போதனா வைத்தியசாலை உட்பட இம் மாவட்டத்தில் பல இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் தமது குடும்பத்துடன் எவ்வித தொடர்புகளுமற்ற நிலையிலும், கஷ்டமான நிலையிலும் கல்வியைத் தொடர்கின்றார்கள்.

மனித நேய அடிப்படையில் இவர்களுக்கு உதவ வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு.

நிலக் கண்ணி வெடிகள் அகற்றும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவேயில்லை. கண்ணி வெடிகள் அகற்றப்படும் நாளை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். பல இடங்களில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் கூட மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலையிலுள்ளனர்.

கப்பல் சேவை சீராக நடைபெறாத காரணத்தால் சீனி உட்பட பல பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருள்கள் களஞ்சியப் படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. மூன்று மாதங்களுக்குரிய அத்தியாவசியப் பொருள்கள் இங்கு களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

விவசாய உற்பத்தி ஓரளவுக்கு அதிகரித்து வருகிறது. ஆனால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பில்லாமையினால் விவசாயிகள் கஷ்டம் அடையும் நிலையில் உள்ளனர்.

பழுதடையாத உற்பத்திப் பொருள்களை விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு நிறுவனங்கள் கொள்வனவு செய்து கொழும்புக்கு அனுப்பி சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். வசதிபடைத்த தனியார் வியாபாரிகள் குறைந்தவிலையில் விவசாயிகளிடமிருந்து பொருள்களை கொள்வனவு செய்து கொழும்பு போன்ற இடங்களுக்குக் கொண்டு சென்று கூடிய விலையில் விற்பனை செய்து அதிக இலாபத்தை ஈட்டிவருகின்றனர்.

வரையறுக்கப்பட்ட இடத்திலும் குறிக்கப்பட்ட நேரத்திலும் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவதால் மீனவர்களின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு தங்கு தடையின்றி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(இ-5)

## சமய நிகழ்வில்

திருநெல்வேலி, மார்ச் 22
நீர்வேலி தெற்கு, ஒல்லை வேம்படி அருள்மிகு ஸ்ரீஞான வைரவசுவாமி ஆலயத்தின் மணவாளக்கோலத் திருவிழா நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

விசேட பூசை, 108 சங்காபிஷேகம், அன்னதானம் என்பன இடம் பெறவுள்ளன.
(ஐ-135)

## காசரோக தினம்

திருநெல்வேலி, மார்ச் 22
உலக காசரோக நோய்த் தடுப்பு தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அனுட்டிக்கப்படவுள்ளது.
(ஐ-135)

## நாடாளுமன்றம் நாளை கூடுகிறது

புதுடில்லி, மார்ச் 22
இந்தியாவின் பன்னிரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நாளை திங்கட்கிழமை முதல் முறையாகக் கூட்டப்படும். அதனைத் தொடர்ந்து புதன் கிழமை மாநிலங்களவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும்.

முதல் இருநாள்களிலும் முன்னாள் அமைச்சர் இந்திரஜித் குப்தா தற்காலிக சபாநாயகராக இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

புதன்கிழமை நடைபெறும் இரு சபைகளினதும் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் உரையாற்றுவார்.

1998, 1999 ஆம் ஆண்டுக்கான நிதிமசோதாவும் நாடாளுமன்றத்தில் புதனன்று சமர்ப்பிக்கப்படும்.

## வட்டு. கோஷ்டி மோதல்
## சந்தேக நபர்கள் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22
வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் இருபது சந்தேக நபர்களையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு தலா 500 ரூபா காசுப்பிணையிலும், இரண்டாயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவித்தார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் மேற்படி சந்தேக நபர்கள் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையும் நீதிவானால் விதிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபர்கள் 20 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நிராகரிக்கப்பட்டு புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே நீதிவான் அவர்களை விடுவிக்க உத்தரவிட்டார்.
(ஐ-5)

## டி. எஸ். நினைவு நாள்

கொழும்பு, மார்ச் 22
இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் 46 ஆவது ஞாபகார்த்த வைபவம் இன்று நடைபெற உள்ளது.

கொழும்பு சுதந்திரதினச் சதுக்கத்திலுள்ள டி. எஸ். சேனநாயக்கவின் உருவச் சிலைக்கு இன்று காலை 8.30 மணிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செய்யப்படும்.

சபாநாயகர் கே. பி. இரத்நாயக்க, அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மாநகர முதல்வர் ஹரி ஜெயசூரிய மற்றும் ராஜதந்திரிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.
(இ-9)

## மெய்வல்லுநர் போட்டி

ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட் கிழமை அதிபர் க. சுந்தரலிங்கம் தலைமையில் மேற்படி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், வேலணை – ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி வ. நிமலநாதன், ஊர்காவற்றுறை பிரதேச சபை முதல்வர் ந. மதன்ராஜா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.
(ஐ-ரீ)

## புலிகள் பற்றிய தகவலை தெரிவிக்காமல் இருப்பது குற்றம் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22
புலிகள் பற்றிய தகவல்களை தெரிவிக்காமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பாதுகாப்பு தரப்பினர் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்களையும், வியாபாரிகளையும் ஒன்று சேர்த்து புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவி பெற்றுக் கொள்ள முயற்சிப்பதாக விசேட தகவல் மூலம் பாதுகாப்புப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களை மறைத்து இயக்க நடவடிக்கைகளுக்கு உதவிகள், ஒத்துழைப்புகள் வழங்கும் அரசாங்க ஊழியர்களுக்கு எதிராகவும், ஏனையோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்த வகையிலான சிவில் நபருக்கு எதிராகவும், அரசாங்க ஊழியர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அனேக கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட இந்த சுதந்திரத்தையும், சமாதானத்தையும் பாதுகாப்பது யாழ். மக்களாகிய உங்கள் அனைவரினதும் நன்மைக்காகவே என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

இந்தச் சுதந்திரத்துக்கு எதிராகச் செயற்படும் நபர்களைப் பற்றியதான தகவல்களை பாதுகாப்புப் படையினருக்கு அறிவிக்குமாறு வேண்டுகின்றோம் என்றுள்ளது.
(இ-7)

## பனங்கள் தேக்கம்

ஊர்காவற்றுறை, மார்ச் 22
ஊர்காவற்றுறை பிரிவில் அதிகளவு பனங்கள் சேகரிக்கப்படுவதால் அரைவாசிக்கு மேல் தேங்கி வீணே விரயமாவதாகத் தெரிகின்றது. இதனால் தொழிலாளர்களுக்கு வருமானம் குறைவாகவே கிடைக்கின்றது.

ஊர்காவற்றுறை தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தின் கள் பதப்படுத்தும் தொழிற்சாலை இராணுவ நடவடிக்கையின் போது முற்றாகச் சேதமாக்கப்பட்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டதென சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார்.
(ஐ-ரீ)

## காரைநகரில் அலுவலகம் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம். மார்ச் 22
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர். ராமேஸ்வரன், ஆர். இராமமூர்த்தி ஆகியோரின்

(10 ஆம் பக்கம் பார்க்க)


## சுன்னாகம் லயன்ஸ் கழகம்
## அறிவித்தல்

சுன்னாகத்தில் வசிக்கும் திரு. கணேஸ்வரன் பகீரதன் என்ற 32 வயது இளைஞர் இரு சிறு நீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளார். சுமார் எட்டு லட்சம் ரூபா வரை செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டு தமது குடும்ப கஷ்ட நிலை காரணமாக திரு. கணேஸ்வரன் எம்மிடம் உதவி கோரியுள்ளார்.

அவரது கோரிக்கையை ஏற்று சுன்னாகம் லயன்ஸ் கழகம் நிதி உதவி செய்யத் தீர்மானித்துள்ளது. இந்த இளைஞருக்குப் பண உதவி புரிய விரும்பும் நல்லெண்ணம் படைத்தோர் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரிடம் நேரடியாகவோ அல்லது எமது சுன்னாகம் தேசிய வங்கிக்கிளையிலுள்ள ஐ. என். எஸ். 1102 இலக்க சேமிப்புக் கணக்கில் **31 – 05 – 1998** க்கு முன்னர் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

ஐ. நற்குணநாதன்
செயலாளர்

சுன்னாகம் லயன்ஸ் கழகம்

(சி/3174)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் 2 பெரும் ஆட்டங்களும்

# நேற்று வெற்றி தோல்வி இன்றி முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டமும் —

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டமும் — வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தன.

## சென்ட்ரல் சென். ஜோன்ஸ்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் (சென்ட்ரல்), யாழ்ப்பாணம் பரியோவான் (சென். ஜோன்ஸ்) கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போர் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மேற்படி 92 ஆவது வருடாந்த கிரிக்கெட் மோதல் நேற்றும் நேற்று முன்தினமும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஓட்ட விவரங்கள் வருமாறு:-

★ சென். ஜோன்ஸ்:- ஏழு விக்கெட் இழப்புக்கு 178 (ஏ. ரி. கௌரிபாகன் 34, கே. பிரகாஷன் 32, பி. டினேஷ் 77, என். சுரேஷ் குமார் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்கள்) மற்றும் மூன்று விக்கெட் இழப்புக்கு 138 (ஏ. ரி. கௌரிபாகன் 77, ஏ. அருணன் 25, கே. சஞ்சயன் 23, பி. கேதீஸன் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்கள்.)

★ மத்திய கல்லூரி:- 154 (ஏ. ரஜீவன் 41, எஸ். தனேஷ்காந்தன் 31, ஆர். சுதர்ஸன் 21, பி. டினேஷ் 54 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள்) மற்றும் 1 விக்கெட் இழப்புக்கு 57. (ரி. வாசுதேவன் 31).

### பரிசில்கள் விவரம்

இப்போட்டியில் பெறுபேறுகளின் அடிப்படையில் சிறப்புத் தேர்வு செய்யப்பட்ட வீரர்கள் வருமாறு.

★ பல்துறை வீரர்:-ஏ. ரி. கௌரிபாகன் (சென். ஜோன்ஸ்.)

★ சிறந்த துடுப்பாட்ட வீரர்:- பி. டினேஸ் (சென் ஜோன்ஸ்).

★ சிறந்த பந்து வீச்சாளர் பி. டினேஷ்(சென் ஜோன்ஸ்)

★ சிறந்த ப்ந்துத் தடுப்பாளர்:- பி. கேதீசன் (மத்திய கல்லூரி),

★ ஆட்டநாயகன்:- ஏ. ரஜீவன் (மத்திய கல்லூரி).

★ அதிக ஓட்டங்கள்:- பி. டினேஷ் (சென். ஜோன்ஸ்.

இந்தப் போட்டிக்கு எஸ். சுசீந்திரலிங்கம். என், ரவீந்திரா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## பற்றிக்ஸ் யாழ்ப்பாண கல்லூரி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான 'பொன் அணிகள் போர்' கிரிக்கெட் ஆட்டமும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இந்த ஆட்டம் நேற்றும் நேற்று முன்தினமும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஓட்ட விவரம் வருமாறு;

★ சென் பற்றிக்ஸ்: 7 விக்கெட் இழப்புக்கு 231 (ரி. ஜெயராகவன் 61, எஸ். சஞ்சீவன் 43) மற்றும் 4 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 43.

★ யாழ்ப்பாணக் கல்லூரி: 137 மற்றும் 4 விக்கெட் இழப்புக்கு 50.

### பரிசில்கள் விவரம்

இப்போட்டியில் சிறந்த விளையாட்டுக்காகப் பரிசு பெற்ற வீரர்கள் வருமாறு:

★ சிறந்த துடுப்பாட்ட வீரர்: ரி. ஜெயராகவன் (சென். பற்றிக்ஸ்)

★ சிறந்த பந்து வீச்சாளர் ரி. றொஷ்டன் (சென். பற்றிக்ஸ்)

சிறந்த பந்து தடுப்பாளர்: நியூட்டன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

★ சிறந்த பல்துறை வல்லுநர்: தே. ரஞ்சித் (சென். பற்றிக்ஸ்)

★ ஆட்ட நாயகன்: ரி. ஜெயராகவன் (சென். பற்றிக்ஸ்)

பி. முருகவேள், எஸ். சிதம்பரப்பிள்ளை ஆகியோர் இந்த ஆட்டத்துக்கு மத்தியஸ்தம் வகித்தார்கள்.

## காரைநகரில்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

கிளை அலுவலகம் ஒன்று காரைநகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அண்மையில் காரைநகருக்கு விஜயம் செய்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அப்பகுதிப் பொது மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்திய பின்னரே கிளை அலுவலகம் திறப்பதென முடிவு செய்தனர்,

இக்கலந்துரையாடலில் காரைநகரின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இப்பகுதியில்நீண்டகாலமாக திருத்தப் படாமலிருக்கும் வீதிகளை திருத்தவும், காரைநகர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி பெற்றுத்தரவும். பொதுக்கிணறுகளைத் திருத்தவும், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுத்தரவும் நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பகுதி மக்களிடம் வாக்குறுதியளித்தனர். (ஐ-5)

## நுண்கலைத் துறை மாணவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறையைச் சேர்ந்த சகல ஆண்டு மாணவர்களுக்குமான விசேட பொதுக்கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கவின்கலை மன்றத்தினால் கோரப்பட்டுள்ளது. (இ-8)

## அலுவலகத்தில் யெல்ட்சின்

ரஷ்ய அதிபர் யெல்ட்சின் நேற்று முன்தினம் தனது கிரெம்ளின் பணிமனைக்குச் சென்று மூன்று மணி நேரம் பணி புரிந்தார்,

கடந்த வாரம் ரஷ்ய அதிபர் நோய்வாய்ப்பட்டு தனது கடமைகளை இடைநிறுத்தியதைத் தொடர்ந்து அவரை ஒரு வார காலம் ஓய்வு எடுக்கும்படி அவரது மருத்துவர்கள் கேட்டுக் கொண்டமை தெரிந்ததே. (ஐ-ரீ)

## கனரக...

(முதலாம் பக்கத் தொடர்)

வற்றின் ஊடாக புறக்கோட்டையை வந்தடைய வேண்டுமெனவும் —

அவிசாவளையிலிருந்து புதிய நெடுஞ்சாலையூடாக வரும் வாகனங்கள் கிருலப்பனையிலிருந்து எட்மன்றன் வீதி, எல்பிற்றிக்கலமாவத்தையூடாக வருதல் வேண்டுமெனவும் —

கொழும்பு வடக்கிலிருந்து வரும் வாகனங்கள் புதிய களனிப் பாலம், பண்டாரநாயக்க சுற்றுவட்டம், பேஸ் லையின் வீதி, ஸ்ரீ சங்கராஜமாவத்தை தொழில்நுட்பக் கல்லூரிச்சந்தி என்பவற்றின் ஊடாகப் புறக்கோட்டையை வந்தடைதல் வேண்டுமெனவும் — அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கோட்டை, கொம்பனித்தெரு, கறுவாத் தோட்டம், கொள்ளுப்பிட்டி ஆகிய பொலீஸ் அதிகாரப் பிரிவுகள் தீவிர பாதுகாப்பு வலயங்களாக நேற்று சனி முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

தீவிர பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு வரும் கனரக வாகனங்கள் கொழும்புப் பிராந்தியப் பொலீஸ் மா அதிபரின் கையெழுத்திடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருத்தல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இ-7)

## சிமெந்து விநியோகம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்காக ஐயாயிரம் சிமெந்து பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது கிராம அலுவலர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இவர்களின் சிபார்சின்பேரில் சிமெந்து பொதிகள் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் எடுத்து,வருகின்றார். இச்சிமெந்து இந்திய அரசின் நன்கொடை ஆகும். (ஐ-ரீ)

## சிங்கள நடிகர் காலமானார்

இலங்கையின் சிறந்ததிரைப்பட நடிகரும், நாடகக்கலைஞருமான தர்மதாச குருத்து தனது 79 ஆவது வயதில் நேற்று கொழும்பில் காலமானார்.

1950 ஆம் ஆண்டு நாடகத் துறையில் பிரவேசித்து பிரகாசித்த இவர் பின்பு திரைப் படங்கள் பலவற்றிலும் சிறந்த நடிகராக விளங்கினர். (இ-7)

## வெள்ளியன்று...

(முதலாம் பக்கத் தொடர்)

தினம் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் தேர்தல் நடைபெறும்.

சபாநாயகர் ஒருமித்த கருத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி அறிவித்துள்ளது.

ஒருமித்த கருத்துக்களை உருவாக்குவதற்காக பிரதமர் வாஜ்பாய்க்கும் காங்கிரஸ் உள்ளிட்ட மற்றைய கட்சித் தலைவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

சபாநாயகர் தேர்தலுக்குப் பின்னர் எதிர்வரும் புதன் கிழமையன்று குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணன் நாடாளுமன்றத்தின் இருசபைகளும் கலந்த கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்.

நம்பிக்கைத் தீர்மானத்தின் மீதான விவாதம் வெள்ளிக்கிழமையே முடிவடையக் கூடுமென்று நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் மதன் லால் குரானா அறிவித்துள்ளார். (இ-7)

## வடபகுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்கள் திரும்பிச் செல்வதை துரிதப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பாக —

அனைவரும் ஒத்துப் போகும் திட்டம் ஒன்றைக் கண்டு பிடிக்க —

நேற்றைய கூட்டம் கூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

முஸ்லிம்கள் மீளக் குடியமர்வது குறித்து புலிகளின் நிலைப்பாடு தெளிவாக இல்லை.

தாம் மீண்டும் வெளியேற்றப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவே முஸ்லிம்கள் விரும்புகின்றனர் என்று நேற்றைய கூட்டத்தை கூட்டிய அமைப்பினர் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் உதவியும் தமக்குத்தேவை என்று அவர்கள் கூறினர். (இ-9)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்)

புதுடில்லி சென்றிருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பாரதீய ஜனதா அரசாங்கம் பதவி ஏற்றதை அடுத்து உருவாகியுள்ள அரசியல் நிலைவரம் குறித்து இலங்கை விசேட கவனம் செலுத்தி வருவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றவுடன் பேச்சு நடத்த புதுடில்லி சென்றுள்ள முதலாவது வெளிநாட்டுப் பிரமுகர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆவார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் அரசியல் தீர்வுகாணும் முயற்சிக்கு இந்தியா ஆதரவு வழங்கும் என்று கதிர்காமருடனான சந்திப்பின் போது வாஜ்பாய் தெரிவித்தார்.

பாரதீய ஜனதாத் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் நேற்று இரவு புதுடில்லியில் விடப்பட்ட உத்தியோக பூர்வ அறிக்கையில் நன்மை அளிக்கும் விவகாரங்கள் பற்றி இரு தரப்பினரும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.(இ-9-7)

## உதயன் செய்தி...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த புதனன்று 'உதயன்' பத்திரிகையின் முதலாம் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சில விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளன.

★ மேற்படி பெண், படையினர் சிலரால் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டார் என பொலீஸிலோ வேறு நீதி அமைப்புகளிடமோ எந்த முறைப்பாடும் இது வரை செய்யப்படவில்லை.

★ பேசவோ, கேட்கவோ முடியாத இப் பெண் கண்கள் கட்டப்பட்ட நிலையில் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதால் தமக்கு நேர்ந்தவற்றை உணர்ந்து வெளிப்படுத்தவோ, கூறவோ சந்தேக நபர்களை அடையாளம் காட்டவோ முடியாதவராக உள்ளார்.

★ அத்தகைய செயல்கள் எதிலும் படையினர் எவரும் ஈடுபடவில்லை என உயர் படை வட்டாரங்கள் திட்டவட்டமாக மறுத்துள்ளன—

★ மேற்படி பெண்ணின் [illegible] தொடர்ந்து உதிரப் போக்கு பெரிய அளவில் இருந்ததால், அங்கு சந்தேகநபர்களின் தவறுக்கு எதிரான நிகழ்வை நிருபிக்கும் வித்தியாசமான திரவம் எதையும் பெறமுடியவில்லை என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

★ இப் பெண் மீது புரியப்பட்ட பலாத்காரம் காரணமாக அப் பெண்ணின் உறுப்பில் தொடர்ந்து உதிரப் போக்கு ஏற்பட்டது. அதற்குக் காரணமாக பெரும் கிழிவுக் காயத்துக்காக அப்பெண் சத்திரசிகிச்சை அறைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு மயக்க நிலைக்கு உட்படுத்தப்பட்டுக் காயம் தையல் போட்டு மூடப்பட்டதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

★ மேற்படி காயம் முனை மழுங்கிய நீண்ட ஓர் உறுப்பு அல்லது பொருள் பெண்ணின் உறுப்புக்குள் ஆழமாகத் திணிக்கப்பட்டதால் ஏற்பட்டது என்று மட்டுமே கூறமுடியும் எனவும், அதை மட்டும் வைத்துக்கொண்டு பாலியல் பலாத்காரம் என்ற முடிவுக்கு வர முடியாது என்றும் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர். (உ)


எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

★ கல்யாண ராமன்
★ ஜப்பானில் கல்யாண ராமன்
★ நான் போட்ட சவால்
★ கர்ணா
★ கோகுலம்
★ கண்சிமிட்டும் நேரம்
★ ரகசிய போலீஸ்

சுப்பலோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3175)

BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.
பிரிவு 2
SPOKENENGLISH With GRAMMAR BY
M. A. HARI
B. A. Dip. in Eng.
ஆரம்பம்: 24-03-98
TUES 9-00 A. m.
(50001)

மாணவர் நலன்புரி நிதிக்காக
விஞ்ஞானபீட மாணவர்கள்
வழங்கும்
விழிச்சுடர்
(நாடகம்)
கைலாசபதி கலையரங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.
22 – 03 – 1998 ஞாயிற்றுக்கிழமை
காலை 10-30 மணி, மாலை 3-30 மணி
அன்பளிப்பு: 20/-, 50/-
அனுமதிச் சீட்டுகள் நுழைவாயிலில்.
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(54147)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org